நவ
பாரதச்
சிற்பிகள்

கு. காமராஜ்

ஆர். பார்த்தசாரதி

UG3955
R007B01

நவ பாரதச் சிற்பிகள்

கு. காமராஜ்

ஆர். பார்த்தசாரதி
(தமிழாக்கம்: ஆபத்சகாயம்)

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்
செய்தி ஒலிபரப்பு அமைச்சகம்
இந்திய அரசு.

மே, 1994 (வைசாக, 1916)

பதிப்புரிமை: பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்

விலை: ரூ. 25.00

புது தில்லி, பட்டியாலா ஹவுசிலிருக்கும் இந்திய அரசு, செய்தி ஒலிபரப்பு அமைச்சக பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், இயக்குநர் வெளியிட்டது.

விற்பனை நிலையங்கள்: பப்ளிகேஷன்ஸ் டிவிஷன். சூபர் பஜாார், கன்னாட் சர்க்கஸ், புது தில்லி-110 001. காமர்ஸ் ஹவுஸ், கரீம்பாய் ரோடு, பல்லார்டு பியர், பம்பாய்-400 038. எஸ்பிளனேட் ஈஸ்ட், கல்கத்தா-700 069. எல். எல். ஏ. ஆடிடோரியம், 736 அண்ணா சாலை, சென்னை-600 002. பீகார் ஸ்டேட் கோ-ஆப்பரேடிவ் பாங்கு பில்டிங், அசோகா, ராஜ் பத், பட்னா-800 004. பிரஸ் ரோடு, திருவனந்தபுரம்-695 001. 10-பி, ஸ்டேஷன் ரோடு, லக்னோ-226 019.

அச்சிட்டோர்:

பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., சென்னை-600 014.

இத்தொகுதியைக் குறித்து சில வார்த்தைகள்

இத்தொகுதியை வெளியிடுவதன் நோக்கம், நம் தேசிய மறுமலர்ச்சிக்கும், விடுதலைப் பேற்றுக்கும் உறுதுணை யாயிருந்துள்ள புகழ்மிக்க பாரதப் புதல்வர்கள், புதல்வி களின் போராட்டங்களையும், சாதனைகளையும் தற்கால, வருங்காலத் தலைமுறையினருக்காகக் குறித்துவைப்பதே யாகும். ஒரு சிலர் தவிர, பலரது ஆதார பூர்வமான வாழ்க்கை வரலாறுகள் கிடைப்பதில்லை.

இவ்வாழ்க்கை வரலாறுகள், பிரபல தலைவர்களின் வாழ்க்கையையும், செயற்பாடுகளையும், அவர்கள் வாழ்ந்த காலச்சூழலையும் எளிய நடையில் சுருக்கமாக விஷயமறிந்த வர்களால் எழுதப்பட்டுக் கைக்கு அடக்கமான பதிப்புக் களாக வெளிவரத் திட்டமிடப்பட்டுள்ளது. விரிவான ஆய்வுக்காகவோ அல்லது ஏற்கனவேயுள்ள விரிவான வாழ்க்கை வரலாறுகளுக்குப் பதிலாகவோ இவை வெளி யிடப்படவில்லை.

இவ்வாழ்க்கைக் குறிப்புகளை எழுதும் பணியை வெவ் வேறு நபர்களிடம் ஒப்படைக்க வேண்டியுள்ளது. ஆனபடி யால் இவ்வாழ்க்கைக் குறிப்புகளை அந்தந்தக் காலவரிசைப் படி பிரசுரிக்க முடியவில்லை. எனினும், சிறிதுகாலத்திற் குள்ளேயே பிரபல தேசியப் பிரமுகர்கள் அனைவரும் இத் தொகுதியில் இடம் பெறுவர் என நம்பப்படுகிறது.

திரு. ஆர். ஆர். திவாகர், இப்பதிப்புத்தொடரின் பொது ஆசிரியர்.

எழுதியவரின் உரை

காமராஜரின் வாழ்க்கை வரலாற்றை வரையுமாறு என்னைக் கேட்டதும், நான் அப்பணியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன். இருபதாமாண்டுகளின் பிற்பகுதியி லிருந்து எனக்கு அவருடன் தொடர்பு ஏற்பட்டது. இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டத்துக்கு நாங்கள் பிரதிநிதிகளாகக் கல்கத்தா சென்றோம்; நாங்கள் கல்கத்தாவைச் சுற்றிப் பார்க்கச் சென்ற சமயம் சௌரிங்கி வழியே நாங்கள் நடந்து சென்றது இன்னும் என் நினைவில் இருக்கிறது. பிறகு நான் அவரை திரு. சத்திய மூர்த்தியின் இல்லத்தில் சந்திப்பது வழக்கம். பிறகு அவர் சென்னைக்கு வந்ததும், சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்தில் அவரைச் சந்தித்து வந்தேன். இக்காரியாலயம் ரவுண்ட்டானாவிற்கு பின்புறமுள்ள ஒரு சந்தில் இருந்தது. முப்பதாமாண்டுகளில் தான் நான் அகில இந்திய வானொலியில் சேர்ந்திருந்தேன். அகில இந்திய வானொலியின் சென்னை நிலையம், 1938 ஜூனில் திறக்கப்பட்டது. நிகழ்ச்சிப்பிரிவில் முதலாவதாகச் சேர்ந்தவர்களில் நானும் ஒருவன். அவ்வமயம் பிரதம மந்திரியாக (அந்நாட்களில்) முதலமைச்சர் இவ்வாறு தான் அழைக்கப்பட்டார்) இருந்த ராஜாஜி, சென்னை நிலையத் தைத் துவக்கி வைத்தார். நான் பேச்சுகள், நாடகம் தொடர் பான பணிக்குப் பொறுப்பாயிருந்தேன். சத்திய மூர்த்தி போன்ற காங்கிரஸ் தலைவர்கள் உட்பட பிரபல பிரமுகர் கள் எல்லோரும் வானொலியில் உரையாற்ற அதாவது அரசியல் அல்லாத விஷயங்கள் குறித்துத்தான் உரையாற்ற வந்தனர். காமராஜ் அவர்களை ரேடியோவில் பேசும்படி வேண்டிக் கொண்டேன். முதலில் அவர் இணங்காத போதிலும் பின்னர் அவரை ஒப்புக் கொள்ள வைத்தேன். 1949-ம் ஆண்டு சென்னை அரசில் தகவல் பிரசார இயக்கு னர் பதவியை மேற்கொண்டேன். அவ்வமயம் ஸ்ரீ குமார சாமி ராஜா முதல் மந்திரியாயிருந்தார். 1954 ஏப்ரல் மாதம் காமராஜர் முதலமைச்சராகவே, அவர் காலத்தில் தகவல் பிரசார இயக்குனராகத் தொடர்ந்து பணியாற்றும் பெரும் பேரு எனக்குக் கிட்டியது. அவர் தோழர்களில் சிலர், எனக்கு விரோதமாக அவர் மனதை மாற்றி, என் னைத் தகவல் பிரசார இயக்குனர் பதவியிலிருந்து மாற்ற

முயன்றனர். அவர் சிறிதும் அசைவில்லை. வெளியார் செல்வாக்குக்குச் செவி சாய்க்காமல் அதிகாரிகளிடமும் சேவைப் பகுதியினரிடமும் எவ்வளவு நியாயமாக நடந்து கொண்டாரென்பதற்கு இது ஒரு சான்று. 1956-ஆம் ஆண்டு சென்னை அரசாங்கம் தனிப்பட்ட கதர் இலாகா அமைத்ததும் எனக்கு அப்புதிய இலாகாவின் இயக்குனர் பதவி கொடுக்கப்பட்டது. நான் சற்றுத் துணுக்குற்றேன். தகவல் பிரசார இலாகாவிலிருந்து என்னை அகற்ற இது தந்திரமானதொரு நடவடிக்கை என எண்ணினேன். நான் காமராஜ் அவர்களிடம் சென்று, என்னை ஏன் மற்றொரு இலாகாவுக்கு மாற்றுகிறார்களென்றும், தகவல் பிரச்சார இயக்குனராக நான் செய்த வேலை பிடிக்கவில்லையா என்றும் வினவினேன். சட்டென அவர் பதிலளித்தார்: ''அப்படியாயிருந்தால் (என்வேலை திருப்திகரமாயில்லா திருந்தால்) நான் உன்னிடமே அப்பட்டமாகச் சொல்லி யிருந்திருப்பேன். அது அப்படியில்லவே இல்லை. கதர் இலாகா இயக்குனர் பதவிக்கு உங்கள் பெயர் பிரஸ்தா பிக்கப்பட்டதும் நான் உடனே அதை ஒப்புக் கொண்டேன்; காரணம் உங்களை விட, அதிகத் தகுதியுள்ளவர் வேறொரு வரும் கிடையாதென்பது என் எண்ணம். கதரில் உண்மை யான பற்று உங்களுக்கு உள்ளது. புதிய இலாகாவாயிருப்ப தால் உங்கள் ஆற்றலைக் காண்பிக்கச் சாலச்சிறந்ததொரு வாய்ப்பை இது கொடுக்கும். தப்பெண்ணமோ தயக்கமோ வேண்டாம். ஏற்றுக் கொள்ளுங்கள், நான் கூறுவதை'' இவ்வாக்குறுதியின் பேரில் அதை நான் ஏற்றுக் கொண் டேன்; ஏன் ஏற்றுக் கொண்டோமென்று பின் வருந்தவே யில்லை; காரணம், எனக்குப் பிடித்திருந்த துறையில் ஆக்க முறையில் பணிபுரிந்து விறுவிறுப்பாக உண்மையிலேயே ஏதேனும் செய்ய முடியும் என்பதுதான். அவர் முதன் மந்திரியாகப் பதவி வகித்த காலத்தில் நான் எனக்காக எவ்விதச் சலுகையும் வேண்டி அவரை அணுகியதே இல்லை; அவரும் தம் நெருங்கிய நண்பர்களுக்குக் கூட எந்தவகை யான சலுகையும் தர, தமது பதவியைப் பயன்படுத்திய தில்லை. இச் சீரிய குணம் அவரைச் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட உயர்ந்த மனிதராக்கியது. பிற்பட்ட ஆண்டுகளில், குறிப்பாக அவரது இறுதிக்கால ஆண்டுகளில் தோழர்களிடம் இதே போன்ற இனிய நட் புறவுகளைப் பராமரித்து வந்தார்.

அவர் தனிமையாக இருந்தபடியால், அவர் மறைவ தற்கு முன்னர் சில மாதங்கள் நான் அவரை அடிக்கடி

கண்டு அவருடன் சிலநேரம் தங்கியிருப்பது வழக்கம், இதர நண்பர்களும் அவரைக்காண வருவது உண்டு. எவரையும் பார்க்க மறுத்ததில்லை அவர். அவர் மறைந்த அக்டோபர் 2-ந் தேதி காந்திஜயந்திக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு நான் அன்றாடம் அவரைக் காண முடியவில்லை; மறுநாள் பிற்பகலில் அவரைப் பார்ப்பதாக இருந்தேன். நான் என் இருப்பிடத்தை விட்டு பிற்பகல் *3* மணியளவில் புறப்பட்டுச் சென்றபோது காமராஜ் காலமாகி விட்டார் என்று உரத் துக்கூவியவாறு வீதி வழியே சில பணியாளர்கள் சென்ற தைப் பார்த்தேன். நான் அதிர்ச்சியுற்றேன்; என் செவி களையே என்னால் நம்பமுடியவில்லை. தியாகராய நகர் திருமலைப்பிள்ளைத் தெருவிலிருக்கும் அவர் இல்லம் நோக்கி உடனே விரைந்தேன். அவரது இல்லத்தில் கூட்டத் தைச் சமாளிக்க முடியாது போகவே அவர் உடல் ராஜாஜி மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதென்பதை அறிந்தேன். மக்கள் பார்வைக்காக அரசு முறையில் வைக்கப் பட்டிருந்த, அவரது உடலைக்காண, ராஜாஜி மண்டபத்திற்குப் பின்னர் விரைந்தேன். மண்டபத்தைச் சுற்றிலும் அரசு எஸ்டேட் திறந்த வெளி மைதானத்திலும் தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தவென மக்கள் திரண்டு வந்த வண்ணமிருந்தனர். அது உள்ளத்தை உருக் கும் காட்சியாயிருந்தது. ஆடவர், பெண்டிர், வாலிபர், வயோதிகர் உள்ளிட்ட எல்லா வயதினரும் ஆளாத்துய ருடன் விம்மி விம்மிக் கண்ணீர் வடித்துப் புலம்பியவாறு தங்கள் அன்புத் தலைவரிடம் கொண்ட, அளவுகடந்த பாசத்தைக் காண்பித்தனர். மக்கள் நிறைந்த இப்பெருங்க கடலில் நான் ஒரு துளிமாத்திரமே.

பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு ஏற்பட்டதைப் போலவே எனக்கும் ஏற்பட்ட ஈடு செய்ய முடியாததொரு சொந்தப் பேரிழப்பு இது.

அன்பே உருவமான மாபெரும் அந்த உத்தமருக்கு அடக்கமே உருவான அவரது வாழ்க்கை வரலாற்றை அர்ப்பணிக்கிறேன்.

இதில் சில குறைபாடுகள் இருக்கலாம்; ஆனால் வாசக அன்பர்கள் அவற்றைப் பொருட்படுத்தாமல், இது அர்ப் பணிக்கப்பட்டுள்ள அதே உணர்வுப் போக்கில் எடுத்துக் கொள்வரென்று நம்புகிறேன்.

சென்னை **ஆர். பார்த்தசாரதி**

பொருளடக்கம்

1.	ஒரு பகலவன் உதயம்	1
2.	அரசியல் பின்னணி	5
3.	சுதந்திரப் போராட்டத்தில் பிரவேசம்	11
4.	குருவும் சீடரும்	11
5.	வெள்ளையனே வெளியேறு இயக்கம்	16
6.	தந்தையாய்த் தாங்கும் தனியுருவம்	19
7.	கட்சித் தலைமைப் பதவியேற்பு	23
8.	ராஜாஜி—காமராஜ் கூட்டு	27
9.	இன்னல்களை எதிர்கொண்டார்	31
10.	'காமராஜ் திட்டம்'	33
11.	ஆற்றல் மிக்க அருந் தலைவர்	36
12.	அனைத்துலக வித்தகர் ஆதல்	41
13.	காமராஜும் உணவுப் பிரச்னையும்	48
14.	இறுதிப் பத்தாண்டு	51
15.	முடிவுரை	56

1

ஒரு பகலவன் உதயம்

இந்திய தீபகற்பத்தின் தென் கோடியில் தமிழ் நாட்டி லுள்ள ராமநாதபுரம் ஜில்லா, பருத்திக்கும் புகையிலைக்கும் பெயர் பெற்றது. மக்கள் நெருக்கமில்லாத இம்மாவட்டத்தில் பிரபல நாடார் சமுதாயத்தினர் வசிக்கின்றனர். நாடார் சமுதாயத்தினர் ஆழ்ந்த இந்துக்கள், சத்திரிய நாடாள்வர் கள் (ஆட்சியாளர்) என்ற உரிமை கொண்டுள்ளனர். இது ஒரு வகையில் உண்மையே. படிப்படியாக இச்சமுதாயத் தைச் சேர்ந்த சில புள்ளிகள் வர்த்தகம், வாணிபம் செய் வதை மேற்கொண்டு, இத்தொழில் காரணமாக, ஒரு படி மேலே உயர்ந்தனர். குறிப்பிட்ட இதர சில சமுதாயத்தி னரை இவர்கள் தீண்டாதோர் எனக்கருதினர். ஆனால் இவர்கள் உயர் சமுதாயத்திற்கு எப்போதும் மரியாதை யளித்து வந்தனர். உயர் வகுப்பினர் வசித்த வீதிவழியே இவர்கள் கடந்து செல்லும்போது தங்கள் மேல் துண்டை எடுத்து, இடுப்பில் கட்டிக்கொண்டு, கால் செருப்புகளைக் கழற்றி, கையில் எடுத்துச் சென்றனர், இது மரியாதை செலுத்துவதற்கடையாளமாக எனக்கூறப்படுகிறது. காலப் போக்கில் இந்நிலை மாறியது. (நாடார் சமுதாயத்தை சேர்ந்த சிலர் வியாபாரம் செய்யவே, படிப்படியாக இவர் களின் நிலை உயர்ந்தது) சீக்கிரமே இவர்கள் முதன்மை யான சமுகத்தினராக உயர்ந்து, மேல் வகுப்பினருக்கான மரியாதையையும் நிலையையும் பெற்றனர்.

இம்மாவட்ட வர்த்தக மையமான விருதுபட்டி பெரிய நகராயிற்று.

நாடார்களிடையே, அவர்கள் செய்யும் தொழிலை யொட்டி ஐந்து அல்லது ஆறு உட்பிரிவினர் உள்ளனர். இவர்களிடையே இரு பிரிவினர் பிரபலமானவர். நாடாளும் நாட்டாண்மைக்காரர்களும், மேகவர்ண வகுப்பினருமாவர். இப்பிரிவினருக்கிடையே சமூகக் கொடுக்கல் வாங்கல்களும், கலப்பு மணங்களும் தாராளமாக நிகழ்ந்தன. நாட்டாண்மைக்

காரரான சுலோசன நாடார் தம் சகோதரி பார்வதி அம்மாளை மேகவர்ண வகுப்பைச் சேர்ந்த சின்னப்ப நாடாருக்கு மணஞ்செய்து கொடுத்தார். பார்வதி அம்மாளுக்கு இரு குழந்தைகள் பிறந்து, சீக்கிரமே இறந்து விட்டன. பின்னர் தம் கணவர் வகுப்பைச் சேர்ந்த குமாரசாமி என்பவரை இவர் சுவீகாரம் எடுத்துக் கொண்டார். சுலோசன நாடாருக்கு கருப்பையா காசி நாராயணன் என்ற இரு புதல்வர்களும், சிவகாமி என்ற புதல்வியும் இருந்தனர். தங்கள் பரம்பரை வழக்கத்தையொட்டி, சிவகாமியை குமாரசாமிக்குக் கட்டிக் கொடுத்தார். குமாரசாமி தேங்காய்க் கடை வைத்திருந்தார்.

நீண்ட நாட்களுக்கு இத்தம்பதிகளுக்கு குழந்தை பிறக்காததால், அவர்கள் தங்கள் குலதெய்வமான காமாட்சி அம்மனை வேண்டிக் கொண்டனர். தங்களுக்கு ஒரு ஆண் மகவை அருள 1903 ஜூலை 15-ந்தேதி ஒரு புதல்வன் அவதரிக்கவே அம்மனுக்கு நன்றி செலுத்துவதற்கு அடையாளமாக புதல்வனுக்கு காமாட்சி என்ற திருநாமம் சூட்டினர். எனினும் குழந்தையைத் தாயார் 'ராஜா' என அன்புடன் அழைத்து வந்தார். காமாட்சி என்பது பெண் பெயராக இருக்கிறபடியால் புதல்வனின் பெயர் பின்னர் காமராஜ் என மாற்றப்பட்டது. இரண்டாண்டுகளுக்குப்பின் இத்தம்பதிகளுக்கு ஒரு பெண் பிறக்கவே, அதற்கு நாகம்மாள் என்ற பெயர் சூட்டப்பட்டது. காமராஜ் இயல்பாகவே ஒதுங்கி நின்று, அதிர்ந்து பேசத் தெரியாதவராகவே இருந்தார். இவர் வயதையொத்த சிறுவர்களைப் போல் கூட இவர் அதிகம் பேசமாட்டார், இறுதி வரை இந்நிலையைப் பராமரித்து வந்தார். சுருக்கமாகவே பேசுவார். இதுதான் இவருக்கும் மற்றவர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடு.

காமராஜ், ஐந்து வயதினிலே பள்ளியில் சேர்ந்தார். இவருக்கு வேலாயுதம் என்பவர் முதல் ஆசிரியர், இவருக்குக் கோலாயுதம் என்று பெயர் வைத்திருந்தால் மிக்க பொருத்தமாயிருந்திருக்கும், காரணம், அடி உதவுவதைப் போல் அண்ணன் தம்பி உதவமாட்டான் என்ற பழமொழியில் நம்பிக்கை கொண்ட பரம்பரை ஆசிரிய வகுப்பைச் சார்ந்தவர். இவரது பூவரசன் மரக்கிளையின் தடியடியை பெரும்பான்மை மாணவர்கள் பெற்றனர். காமராஜ், இந்த ஆசிரியரிடம் தான் அகர வரிசையும், கணக்கும் கற்றார். ஆனால் இந்த உபாத்தியாயரின் கொடூர முறைகள் காமராஜருக்கும்

அவர் பெற்றோருக்கும் பிடிக்கவில்லை. ஆனபடியால் இப்பள்ளியிலிருந்து எடுத்து, காமராஜரை மற்றொரு பள்ளியான நாயனார் வித்தியாலயா என்ற ஆரம்பப் பள்ளியில் சேர்த்தனர். இங்குதான் தமிழ் எழுதப்படிக்க காமராஜ் கற்றுக் கொண்டார். பிற்பாடு இவர் விருதுப் பட்டியிலிருந்த ஒரே உயர்நிலைப் பள்ளி க்ஷத்ரிய வித்யாலயாவிற்கு அனுப்பப்பட்டார். சமுதாயத்தினரால் இலவசக் கல்வியளிக்க இப்பள்ளி துவக்கப்பட்டது. இப் பள்ளியின் பராமரிப்புக்காக தினசரி ஒவ்வொரு குடும்பத் தினரும் ஒரு பிடி அரிசி கொடுத்தபடியால் இதற்கு 'பிடி அரிசி' பள்ளி எனப் பெயர் வழங்கலாயிற்று. இம்மாதிரிப் பணிக்காக சமுதாயத்தினர் நிறுவிய ''மகிமை'' நன்கொடை களைக் கொண்டு, பிற்பாடு இப்பள்ளி நடைபெற்றது. காமராஜ் ராஜ்யத்தின் முதன் மந்திரியாயிருந்த போது அமுலுக்குக் கொணர்ந்த இலவச ஆரம்பக்கல்வி அவரது ஊரில் தான் முதன்முதலில் துவங்கியது.

காமராஜ் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து ஓராண்டு ஆவதற்குள் குடும்பத்துள் குழப்பமேற்பட்டது. காமராஜ ரின் தகப்பனாரின் மொத்த வியாபாரம் இவ்வமயம் தான் சூடு பிடித்திருந்தது. ஒரு நாள் அவர் கடையிலிருந்து வீடு திரும்பிய சமயம் மார்பில் வலி இருப்பதாகச் சொன்னார்; மறுதினம் மறைந்து போனார். காமராஜரின் அன்னைக்கு இது பேரிடியாகப் போயிற்று. காமராஜ், அவரது சகோதரி ஆகிய தன் இரு குழந்தைகளையும் வளர்க்க வேண்டும். இதற்குச் சில மாதங்களுக்கு முன்னர்தான் கணவனையிழந் திருந்த தனது மாமியாரையும் காப்பாற்ற வேண்டியதா யிற்று. காமராஜருக்கு கருப்பையா நாடார் என்ற ஒரு மாமன் விருதுப்பட்டியில் ஜவுளிக்கடை வைத்திருந்தார். சிவகாமியம்மாளுக்கு உதவி செய்ய இவர் ஒருவர் தான் இருந்தார். இவர் சிவகாமியம்மாளின் நகைகளை விற்று, அத்தொகையைக் குடும்பத்தை நடத்தத் தொடர்ந்து வருவாய் கிடைக்கத் தக்கவாறு, முதலீடு செய்தார். காமராஜ் பள்ளிக் கல்வியை முடித்து, மாமன் நடத்தி வந்த வியாபாரத்தில் அவருக்கு உதவி செய்தால் குடும்பம் நடத்தப் போதுமான வருவாய் கிடைத்து வருமென காமராஜின் மாமனும் அன்னையும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

காமராஜருக்குக் கல்வியில் அதிகம் நாட்டமில்லாது மறுப்பு செய்தார். மற்றச் சிறுவர்களைப்போல் இவர்

எதிலும் முன்னுக்கு நிற்காமல் ஒதுங்கியே இருந்தார். அவரது இச் சுபாவத்தை எடுத்துக்காட்ட ஒரு உதாரணம் கூற முடியும். இவரது பள்ளியில் விநாயகர் சதுர்த்தி விழாக் கொண்டாட சிறுவர்களிடம் தலைக்கு அரையணா வசூலிக்கப் பட்டது. பூசைக்குப் பிறகு பிரசாதம் விநியோகிக்கப்பட்ட போது சிறுவர்கள் வழக்கப்படி பிரசாதத்துக்கு முண்டியடித் துக் கொண்டு ஓடினர். காமராஜரோ அமைதியாக ஒதுங்கி நின்று கொண்டிருந்து விட்டுக் கூட்டம் கலைந்த பின்னர் பிரசாதம் வாங்கச் சென்றார். இவருக்குக் கிடைத்தது என்னவோ கொஞ்சமே. அதை எடுத்துக்கொண்டு இல்லம் வந்தடைந்ததும் இவரது பாட்டி இவருக்கு இவ்வளவு தானா கிடைத்தது என்று வினவவே, எல்லோருடனும் தான் முண்டியடித்துக்கொண்டு செல்ல விரும்பவில்லை என்றார்.

இவரது வாழ்நாள் முழுவதும் இதே நிலைதான் கொண்டிருந்தார். சதா ஒதுங்கி நிற்பதையே உசிதமாகக் கருதினார். தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவரான போதும், முதன் மந்திரியான போதும் அனைத்திந்தியக் காங்கிரஸ் தலைவரான போதும் இதே நிலைதான். இப் பதவிகளெல்லாம் இவர் நாடாமலேயே இவரை வந்தடைந்தன.

2

அரசியல் பின்னணி

காமராஜ் தற்செயலாக அரசியல் துறையில் பிரவேசித்தார். மிகச் சிறுபிராயத்திலேயே இவர் அரசியலில் நாட்டங் கொண்டார். காந்திஜி, 1921-22-ம் ஆண்டில் ஒத்துழையாமை இயக்கத்தை துவக்கிய போது காமராஜ் சிறுவனாகவே இருந்தார். விருதுநகரில் நடந்த சில கூட்டங்களுக்குச் செல்வது இவர் வழக்கம். இருபதாமாண்டுகளில் முதன்முதலில் சத்திய மூர்த்தியின் சொற்பொழிவைச் செவியுற்று, அவரது வீராவேசச் சொற்பொழிவினால் ஊக்கம் கொண்டார். மாமன் கடையில் அவருடன் வேலை செய்து கொண்டிருக்கையில் கூட, காந்திஜியின் சக்தியினால் கவர்ந்திழுக்கப்பட்டார். ஜாலியன்-வாலா-பாக் படுகொலையைக் குறித்துக் கேள்வியுற்றார். இதனால் நாடு முழுவதுமே அதிர்ச்சியில் ஆழ்ந்தது. காந்திஜி, சத்தியமூர்த்தி மற்றும் இதர தலைவர்கள், எதிர்ப்புக்குரல் எழுப்பினர். வாலிப காமராஜரின் வாழ்க்கையில் இது திருப்புமுனையாக அமைந்தது. இவரது வாலிபத்துடிப்பும், ஊக்கமும் மேலோங்கின. இவர் ஒரு தொண்டராகக் காங்கிரஸில் சேர்ந்து, சில காலத்திற்குத் தொண்டராகவும், ஊழியராகவும் இருப்பதிலேயே திருப்தியடைந்தார். இவரது தாயாருக்கும் மாமனுக்கும் இவர் அரசியலில் கலந்தது பிடிக்கவில்லை. ஒரு மாறுதல் இவருக்கு நன்மைபயக்கும் என நினைத்தவாறு இவரது தாயாரும் மாமனும் இவரைத் திருவனந்தபுரத்திற்கு அனுப்பினர். அங்கு இவரது மற்றொரு மாமன் மரக்கடை வைத்திருந்தார். ஆனால் அங்கும் இவர் அரசியலில் அக்கறை கொண்டார். திருவனந்தபுரத்திற்கு அருகேயுள்ள வைக்கம் என்ற இடத்தில் தீயர், ஈழவர் வகுப்பு மக்கள் ஆலயத்துக்குச் செல்லும் பாதையில் நடக்கக் கூடாதெனத் தடைசெய்யப்பட்டனர். இதை எதிர்த்து உள்ளூர் தலைவர்கள் சத்தியாக்கிரகம் துவக்கினர். காமராஜ் இச்சத்தியாக்கிரகத்தில் சேர்ந்தார்; ஆனால் கைதாகவில்லை. இறுதியில் திருவாங்கூர் மகாராஜா தீயர்களுக்கும், ஈழவர்களுக்கும் தடைசெய்யப்பட்டிருந்த பாதையில் செல்ல அனுமதி வழங்கினார்.

காமராஜர் இன்ஷுரன்ஸ் ஏஜென்டாகியும் அவர் மனம் அதில் ஈடுபாடு கொள்ளவில்லை. சில மாதங்களுக்குப் பிறகு இன்ஷுரன்ஸ் பணியை விட்டுவிட்டுக் காங்கிரஸ் பணியில் மூழ்கினார். இவருக்குத் திருமணம் முடித்து விட்டால், இவருக்கு மேலும் பொறுப்பு வந்துவிடுமென நினைத்த இவரது அன்னையும் மாமனும் இவருக்குப் பொருத்தமான ஒரு பெண்ணைப் பேசி முடித்தனர். மணம் செய்து கொள்ள மறுத்தார் காமராஜ். சுதந்திரம் கிட்டும் வரையில் பிரம்மச்சாரியாகவே இருப்பதென்ற முடிவுக்கு வந்தார். இவர் தாயாரும் மாமனும் முற்றிலும் ஏமாற்றமுற்று மனமுடைந்தனர். சுதந்திரம் கிடைத்த பின்னரும் கூட இறுதி வரை பிரம்மச்சாரியாகவே இருந்தார் காமராஜ். காமராஜரின் தாயார் உயிர் நீக்கும் வரை அவருக்கு இது தீராத மனக்குறையாகவேயிருந்தது. வாழ்க்கையின் பிற்காலத்தில் கூட இவர் தாயார் இவரை மணம் செய்துகொள்ளுமாறு சதா உபதேசம் செய்து கொண்டேயிருந்தார். இறுதியில் உபதேசம் செய்வதையும் விட்டு விட்டார். உண்மையில் மணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமே காமராஜருக்குக் கிடையாது. சுதந்திரம் கிடைக்கும் வரை மணம் புரிவதில்லையென காமராஜரின் நெருங்கிய நண்பர்களில் இருவரான தனுஷ்கோடி நாடாரும் முத்துச்சுவாமி ஆசாரியும் விரதம் பூண்டிருந்தனர். நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்த பின்னர் முத்துச்சாமி மணம் புரிந்து கொண்டார்; தனுஷ்கோடி நாடார் பிரம்மச்சாரியாகவே இருந்தார். தனுஷ்கோடி நாடார், காமராஜரின் மிக்க ஆர்வங்கொண்ட தோழராயிருந்து, இறுதி வரை பல வழிகளில் காமராஜருக்கு உதவினார்.

3

சுதந்திரப் போராட்டத்தில் பிரவேசம்

சுதந்திரம் பெற மக்கள் அகிம்சையான முறையில் ஒத்துழையாமை இயக்கம் நடத்த வேண்டுமென மகாத்மா காந்தி விடுத்த அறைகூவல் போராட்டத்தில் குதிக்க அநேக இளையோரையும், முதியோரையும் கவர்ந்திழுத்தது போலவே காமராஜரையும் பற்றி இழுத்தது. கதர், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, வகுப்பு ஒற்றுமை ஆகியவற்றுக்கான 'நிர்மாண—பிரச்சாரத் திட்டம்' எனத் தாம் கூறியதை மகாத்மா காந்தி வலியுறுத்தினார். இந்த நிர்மாணத் திட்டத்தைத் தீவிரமாகக் காமராஜ் பிரச்சாரம் செய்தார். பிற்பாடு காங்கிரஸ்காரரர்கள், எஸ். ஸ்ரீனிவாச அய்யங்காரும், இதரர்களும் இதைச் சமூகப் பொருளாதாரத் திட்டம் எனக்கூறி அரசியல் களத்தில் போராடப் பயனற்றது எனத் தயங்கிய போதும், காமராஜரின் நம்பிக்கை சிறிதும் அசையவில்லை. குடியினால் அழிந்து, பொருளாதார நிலை மோசம் அடைந்த, ஏழைக் கிராமவாசிகளுக்கு நன்மை பயக்கத்தக்கது என்னும் வகையில் இத்திட்டம் அவரைக் கவர்ந்தது. கிராமங்களில் வேலையின்மை, பொருத்தமற்ற அரைகுறை வேலை ஆகிய பிரச்சனைகளுக்குக் கதர் மற்றும் கிராமத் தொழில் திட்டம் நிவாரணம் அளிக்கும் என்பதாலும் அவர் அதை ஆதரித்தார். காமராஜ் கதரைத் தீவிரமாக ஆதரித்ததோடு, வாழ்நாள் முழுவதும் அவ்வாறே இருந்தார். நாடார் சமூகத்தினர், முக்கியமாகப் பணம் படைத்த வியாபாரிகள் காங்கிரஸின்பால் அசட்டைப் போக்குக் கொண்டிருந்தனர். பிரிட்டிஷ் ஆதரவாளர்களாய் இருந்தனர். நாடார் சமுதாய வியாபாரிகள் பகிரங்கமரகப் பாதையைக் காட்டிய போதிலும் காங்கிரசுக்காகக் காமராஜ் நிதி திரட்டும் பகீரதப் பணியைச் செய்தார். தொண்டர்கள் ரயில் நிலையத்துக்கும் மற்றும் பொது மக்கள் கூடும் இடங்களுக்கும் அனுப்பி வண்டிகள் மூலம் நிதி திரட்டும் திட்டத்தைக் கொணர்ந்தார்.

அஞ்சாமல் காமராஜ் பொதுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்ய, அவற்றில் டாக்டர். பி. வரதராஜுலு நாயுடு (பழம் பெரும் அனுபவதீரர்), சத்திய மூர்த்தி, மற்றும் இதர, பிரபல தலைவர்கள் சொற்பொழிவாற்றினர். முக்கியமாக ஜஸ்டிஸ் கட்சியினர், இக்கூட்டங்களைக் கலைக்க முயன்றனர். ஆனால் காமராஜரோ நல்ல பயிற்சி பெற்ற, விசுவாச மிக்க வாலிபத் தொண்டர்களைக் கொண்டு இக்கூட்டங்களை ஒழுங்கு செய்தார். கூட்டங்களை ஏற்பாடு செய்யும் சிறப்புத் திறன் அவருக்கு இருக்கவே, பிற்பாடு அநேகத் தடவைகள் அவருடைய இத்திறமை நன்கு வெளியாயிற்று. இதில் ஒன்று தமிழ் நாட்டில் சத்தியமூர்த்தி மேற்கொண்ட சுற்றுப் பயணம். இறுதியாக மாகாணத்தில் ஜஸ்டிஸ் கட்சி பதவிக்கு வந்தது.

காமராஜரிடம் சிறிதும் வகுப்பு விரோதமே கிடையாது. அவர் அற்பவிஷயங்களுக்கு அப்பாற்பட்டவராயிருந்தார். அவர் எப்போதும் தேசிய நோக்கிலேயே எதையும் கண்டார். நாடு, மக்கள், காங்கிரஸ் ஆகியனவே அவருக்குக் கடவுள். இவற்றுக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். வகுப்புவாத உணர்ச்சிகளினால் அவர் அறவே பாதிக்கப் படவில்லை.

1930-ம் ஆண்டு காந்திஜி உப்பு சத்தியாக்கிரக இயக்கத்தைத் துவக்கி, உப்புச் சட்டத்தை மீறி தண்டிக்குச் சென்ற போது தமிழ் நாட்டில் ராஜாஜி, குறிப்பிட்ட சில தொண்டர்களுடன் திருச்சியிலிருந்து வேதாரண்யத்துக்கு சென்றார். உப்புச் சட்டத்தை மீறி, காமராஜ் அவரது ஜில்லாவிலேயே சத்தியாக்கிரகம் செய்ய அவர் கைதாகி, இரண்டாண்டுக் காலச் சிறைத் தண்டனை பெற்றார். இதுவே காமராஜரின் சிறை வாழ்க்கைத் துவக்கம்.

காமராஜ் கைதாகி, சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட தகவல் கேட்டு, அவரிடம் அளவு கடந்த பாசங்கொண்டிருந்த அவருடைய பாட்டி அதிர்ச்சியுற்று ஆரோக்கியம் குன்றினார். பாட்டியின் நிலைமை மோசமடையவே, பாட்டியைப் பார்ப்பதற்காகவே பதினைந்து தின பரோல் (உத்திரவாதத்தின் பேரில் விடுதலை)-லில் காமராஜரை விடுதலை செய்யச் சென்னை அரசாங்கத்திடமிருந்து துரை சாமி நாடார் என்ற உறவினர் ஓர் உத்தரவை வாங்கினார். காமராஜ் பாட்டியாரின் மோசமான உடல் நிலை குறித்து

அவருக்குத் தகவல் கொடுத்து, பாட்டியார் இறக்கும் முன் காமராஜரைப் பார்க்க விரும்புவதாகக் கூறப்பட்டது. 'நன்னடத்தை'க்கான வாக்குறுதி அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் விடுதலை பெறக் காமராஜ் மறுத்தார். துரைசாமி நாடார் ஏமாற்றமடைந்தார். காந்தி-இர்வின் உடன்படிக்கையின் கீழ் இதர அரசியல்வாதிகளோடு காமராஜ் அதிர்ஷ்டவசமாக விடுதலை பெற்றார். விருதுநகர் அவருக்கு வீரருக்கான வரவேற்பளித்தது. பாட்டி இறப்பதற்குச் சற்று முன்னரே வந்தார்.

திரளான மக்கள் கூட்டத்தினர் ஆரவார வரவேற்பளிக்க, அவர்களை விளித்து உரையாற்றும்படி அவர்கள் கேட்டனர். தன் உணர்ச்சிகளை வெளியிட வார்த்தைகள் வராது தவித்து, உணர்ச்சி மேலிட்டது. எனினும் மக்கள் அவர்பால் கொண்டிருந்த பாசத்தினாலும் மரியாதையினாலும் அவர் கர்வமடையாமலிருக்கக் கடவுளை வேண்டிக் கொள்ளுமாறு தமக்கே உரித்தான எளிய முறையில் அவர்களைக் கேட்டுக் கொண்டார். இது அவருக்கே உரித்த அடக்கத்தின் அறிகுறியாகும்.

பாரதத் தலைவர்களும் பிரிட்டிஷ் அரசும் ஓர் ஒப்பந்தத்திற்கு வர முடியாமற் போகவே, வருத்தமுற்று 1931-ல் லண்டனில் நடந்த இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டிலிருந்து காந்திஜி திரும்பினார். காந்திஜியும் மற்றத் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். வைஸ்ராய் வெலிங்டன் பிரபு அடக்குமுறைகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கொணர்ந்தார். பின்னர் இதைத் தொடர்ந்து தேசியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

தடை உத்தரவுகளை மீறிக் காமராஜ் ஏதும் செய்யாத போதிலும் அவருக்கு எதிராகப் பந்தோபஸ்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஜாமீன் கொடுக்கக் காமராஜ் மறுத்ததால் மறுபடியும் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருக்கையில் காமராஜும் மற்றொரு காங்கிரஸ் ஊழியரான அருணாசலமும் சென்னை சதியாலோசனை வழக்கில் சம்பந்தப்பட்டவர்களெனக் குற்றஞ்சாட்ட முயற்சி நடந்தது. காமராஜரிடமிருந்து வாங்கிய பணத்தைக் கொடுத்து அருணாசலம் ஒரு கைத்துப்பாக்கி வாங்கினார். காமராஜ் வாலிபப் புரட்சியாளர்களின்பால் அனுதாபம் கொண்டிருந்த போதிலும், காமராஜ் அவர்களின் நடவ்டிக்கைகளில் தம்மை

சம்பந்தப்படுத்திக் கொள்ளவில்லை. விசுவாசமிக்க காங்கிரஸ்காரராகவே இருந்ததோடு காந்திஜியின் அகிம்சைக் கோட்பாட்டையும் மீறியதில்லை.

விருதுநகர் தபால் காரியாலயத்திலும் ஸ்ரீவில்லிபுத்தூர் காவல் நிலையத்திலும் நாட்டு வெடிகுண்டுகள் வைக்கப்பட்ட போது காமராஜ் மற்றும் அவர் தோழர்களின் மீது மேலுமொரு குற்றஞ்சாட்ட போலீசார் முயன்றனர். சென்னையைச் சேர்ந்த பிரபல பாரிஸ்டரும் பற்று மிக்க தேசியவாதியுமான ஜார்ஜ் ஜோசப் என்பவர் இவருக்காக வாதாட, இவர்கள் குற்றமற்றவர்களென விடுதலை பெற்றனர்.

4

குருவும் சீடரும்

காந்தி-இர்வின் உடன்படிக்கையை யொட்டி, காந்திஜி யின் சத்தியாக்கிரக இயக்கம் திரும்பப் பெறப்பட்டு, புதிய சீர்திருத்தச் சட்டத்தின்படி தேர்தல்களில் போட்டியிடுவ தென்ற பிரேரணையை காங்கிரஸ் ஒப்புக் கொண்டது. கவுன்சிலில் பிரவேசிக்கும் இயக்கத்தில் முன்னிலையில் இருந்த சத்தியமூர்த்தி, 1936-ல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரானார். தேர்தல் இயக்கத்தைத் துவக்கி வைத்தார். இந்த இயக்கத்தை நிறுவும் மாபெரும் பணி காமராஜ் தலையில் விழுந்தது. தம் குருவைப் போல் இல்லாமல், மேடையை முக்கிய இயக்கத்தலமாகக் கொள்ள வில்லை. அடிமட்ட நிலையில் வாலிப ஊழியர்களை பயனளிக்கத் தக்கவாறு ஒன்றுபடுத்தி சத்தியமூர்த்தியின் கரங்களை வலுப்படுத்தினார். காமராஜ் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிச் செயலாளரானார். இதற்கு முன்பு, மத்திய சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார் சத்தியமூர்த்தி.

சென்னை சட்டசபையில் காங்கிரஸ் கட்சித் தலைமைப் பதவியை இவர் மேற்கொள்ளுவாரெனக் கருதப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகத் தொகுதியிலிருந்து இவர் போட்டியிடுவதாயிருந்தது. டி. பிரகாசத்தின் தலைமையி லான ஆந்திர காங்கிரஸ்காரர்கள், சத்திய மூர்த்தியின் தலைமையை விரும்பவில்லை. தலைமைப் பதவிக்குப் போட்டியிருப்பின், ஆந்திரர்கள் சத்தியமூர்த்திக்கு எதி ராகப் பிரகாசத்தை நிறுத்துவர், வாய்ப்புகள் சரிபாதியாக இருக்கும் என்று தோன்றியது. இச்சந்தர்ப்பத்தில் 'இந்து' பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் கே. ஸ்ரீனிவாசன் போன்ற நல்லெண்ணம் கொண்ட நபர்கள் ஒரேமனதாகத் தலைவ ரைத் தேர்ந்தெடுக்கும் பணியைச் செய்ய முயன்றனர்.

அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து, தம் காங்கிரஸ் உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்த ராஜாஜியை அணுகி, தலைமைப் பதவியை மேற்கொள்ளுமாறு

வேண்டிக் கொள்ளப்பட்டது. எனினும் அவர் இஷ்டப்பட வில்லை. தம் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தாம் பிரச்சார வேலை செய்ய முடியாது என்ற நிபந்தனையின் பேரில் சட்டசபையின் காங்கிரஸ் கட்சித் தலைமைப் பதவியை மேற்கொள்ளச் சம்மதித்தார். எடுத்துக் கூறிய பின், அவர் ஒருமனதாகத் தேர்ந்தெடுப்பதை ஒப்புக்கொள் வார், பல்கலைக்கழகத் தொகுதியிலிருந்து அவர் தேர்ந் தெடுக்கப்படலாம் என்று பின்னர் அபிப்பிராயம் தெரி விக்கப்பட்டது. சத்தியமூர்த்தி அந்தத் தொகுதியிலிருந்து போட்டியிட விரும்புகிறார் என்பதை ராஜாஜி சுட்டிக் காண்பித்தார். உண்மையில் சத்திய மூர்த்தி தம் சொந்த மாகாணத்துக்கு வந்து, தலைமைப் பதவியை மேறகொள்ள விரும்பினார். இது பற்றிப் பேச ஸ்ரீனிவாசன் சத்திய மூர்த்தியை தம் இல்லத்துக்கு அழைத்து, அவ்வமயம் சென்னையில் இருந்த சூழ்நிலையில், சத்தியமூர்த்தியின் தலைமைக்கு எதிர்ப்பு இருக்கலாம் என்பதையும், போட்டி யிருப்பின் ஆந்திரத் தலைவர் பிரகாசத்துக்கு வெற்றி பெறும் வாய்ப்பு இருக்கும் என்பதையும் அவருக்கு விவரித்து, இரு தரப்பினரும் ஏற்கக் கூடிய் ஒரு தலைவரை ஏற்பது விரும்பத்தக்கது என்றார். ''இப்படிப்பட்ட தலைவர் எங்கே இருக்கிறார்?'' என வினவினார் சத்தியமூர்த்தி. ''ராஜாஜியை நிறுத்தினால் அவர் இரு தரப்பினருக்கும் சம்மதமானவராக இருப்பார் என்றார் ஸ்ரீனிவாசன். ''ராஜாஜி ரிடையராகி விட்டாரே. திரும்பி வரச் சம்மதிப் பாரா?'' என்று கேட்டார் சத்தியமூர்த்தி. ''அவருக்குச் சம்மதமே'' என்றார் ஸ்ரீநிவாசன். ''அவரே அப்படிச் சொன்னாரா?'' என்று கேட்டார் சத்தியமூர்த்தி. ''ஆம்'' என்றார் ஸ்ரீநிவாசன். ''ஆனால் அவரைச் சட்ட சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்தலுக்கு நிற்பதற்கான எண்ணமிருக்கிறதா அவருக்கு?'' சத்திய மூர்த்தி என்று கேட்டார். ''ஆம், தீவிரப் பிரச்சாரம் செய்ய அவர் உடல் நிலை இடங்கொடுக்காததால் பொதுவான தொரு தொகுதியில் போட்டியிட வேண்டியிராதிருக்கும் பட்சத்தில்'' என்றார். ஸ்ரீனிவாசன் ''பின்னர் அவரை எவ்வாறு தேர்ந்தெடுப்பது? எத்தொகுதியிலிருந்து?'' என வினவினார் சத்தியமூர்த்தி. ''நீங்கள் உங்கள் இடத்தைக் கொடுக்க சம்மதித்தால் பல்கலைக் கழகத் தொகுதியி லிருந்து'' எனப் பதிலளித்தார் ஸ்ரீனிவாசன். பல்கலைக் கழகத் தொகுதி ஏறக்குறைய சத்திய மூர்த்தியின் கைக்குள்

அடங்கினதாயிருந்தது. ஸ்ரீனிவாசன் மேலும் கூறினார், ''நீங்கள் மத்திய சட்ட சபையிலுள்ள உங்கள் பல்கலைக் கழக ஸ்தானத்தை அவருக்குக் கொடுக்கலாம்''. சத்திய மூர்த்தி சொன்னார், ''நான் மகிழ்ச்சியோடு அவ்வாறே செய்வேன், ஆனால் சி. ஆர். சம்மதிப்பாரா என்பதை நிச்சயமாக அறிவோம்''.

''நீங்கள் இப்போதே நேரிடையாக அவரிடமிருந்தே வாக்குறுதி பெறலாம், அவர் இங்கேயே இருக்கிறார், அவரை நீங்கள் கேட்கலாம்'' என்றார் ஸ்ரீனிவாசன். இவ்வளவு நேரம் பக்கத்து அறையில் இருந்த சி. ஆர் வெளியே வந்தார். புன்சிரிப்புச் சிரித்தவாறே சத்திய மூர்த்தி திகைப்புற்றார். அவர் மனதில் சந்தேகம் தோன்ற ஆரம்பித்தது. சிறிதும் வருத்தமோ அல்லது வெறுப்போ காண்பிக்காமல் தம் முதலாவது திகைப்பைக் கடந்தார். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் இது இயற்கையே. சி. ஆர் பல்கலைக் கழகத் தொகுதியில் நிற்க வேண்டும் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டது. சி. ஆர் வாக்காளர்களை நேரில் சந்திக்காத போதிலும் பட்டதாரிகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். சத்தியமூர்த்தியுடன் சேர்ந்து, வாலிப பாரிஸ்ட ரான இவரது எதிராளியின் டெபாசிட் பறிபோக சி. ஆர் பெருத்த மெஜாரிட்டியுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால் சத்தியமூர்த்திக்குத் திரும்பச் சென்னை வருவ தற்கான நம்பிக்கை இன்னமும் இருந்தது. ராஜாஜியின் மந்திரி சபையில் சேர அழைப்பு வருமென எதிர்பார்த்திருந் தார். மந்திரிசபையில் தன்னைச் சேர்த்துக்கொண்டு ராஜாஜி தம் அன்பைத் திரும்பக் காட்டுவார் என சத்திய மூர்த்தி எதிர்பார்த்தார். தாம் மற்றொரு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படலாம் என்ற நிச்சயமிருந்தது சத்திய மூர்த்திக்கு. இம் மாதிரியான நம்பிக்கையுடன் மத்திய சட்டசபை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள பம்பாய் வழியாக டில்லி சென்றார். ராஜாஜி மந்திரி சபை அமைத்து விட்டார் என்றும், மேற்சபைக்கு ''நாமினேட்'' செய்து மந்திரியாக தம் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரான திருச்சி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனை மந்திரி சபையில் சேர்த்துக் கொண்டுள்ளார் என்றும் டில்லி செல்லும் வழியில் தகவல் கிட்டியது. சத்தியமூர்த்திக்கு இது ஒரு அதிர்ச்சியாயிருந்தது. காமராஜருக்கோ இதை விட அதிகம். விவரம் அறிந்த சர்தார் படேல், தமக்கே உரித்த

பாணியில் சத்தியமூர்த்திக்கு எழுதினார், ''இதுவும் நன்மைக்கே—மத்திய சட்டசபையில் நீங்களும் புல்லாபாயும் இல்லாமல் நான் என்ன செய்ய முடியும் என எண்ணி யிருந்தேன். சென்னைக்கு நஷ்டம் நாட்டுக்கு நன்மை''. சென்னைக்கு வராமலேயே சத்தியமூர்த்தியை இருக்கச் செய்யுமாறு காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டிலிருந்த சர்தார் படேலை இணங்க வைக்க ராஜாஜி தீட்டிய திட்டம் இது, என உண்மையில் ராஜாஜி கண்டனக்காரர்களில் சிலர் கருதினர்.

காமராஜ் சத்தியமூர்த்தியின் சீடராயிருந்ததோடு அவருக்கு ஆலோசகராயும் இருந்தார். தாம் எடுத்த முக்கியமான பணி அல்லது முடிவுக்கு ஆலோசனையும் ஆதரவும் பெற காமராஜரையே நாடினார். பின்னர் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவி சத்திய மூர்த்தியைத் தேடி வந்தது. பல்கலைக் கழகத்தில் எப்போதும் தீவிர அக்கறை காட்டி வந்த சத்தியமூர்த்தி இதை ஏற்க விரும்பினார். ஆனால் காமராஜரோ தம் மதிநுட்பத்தினால் இதை நிரா கரிக்குமாறு அவருக்கு ஆலோசனை கூறினார். தீவிர அரசியலில் ஈடுபடாதபடி அவரைத் தனித்திருக்கச் செய்வ தற்கான வலை இது என காமராஜருக்கு தோன்றியபடி யால், காமராஜரின் கெட்டிக்காரத்தனமான ஆலோசனை யைக் கேட்டு சத்தியமூர்த்தி இதை நிராகரித்தார்.

பெருவாரி மக்கள் சத்தியாக்கிரக இயக்கத்தைத் தற் காலிகமாக நிறுத்திய பிறகு காந்திஜி 1941-ல் இந்தியா இரண்டாவது உலகப் போரில் கலந்து கொள்வதை எதிர்ப்ப தற்கு அடையாளமாக, தனி நபர் சத்தியாக்கிரகத்தைத் துவங்கினார். தம் நெருங்கிய சீடர்களைத் தனி நபர் சத்தியாக்கிரகம் செய்யத் தேர்ந்தெடுத்தார். தமிழ்நாட்டில் ராஜாஜி, சத்தியமூர்த்தி, மற்றும் இதரர்கள் கைதானார்கள். போர் நிதிக்கு நன்கொடை கொடுக்கக் கூடாதென்று காமராஜ் பிரச்சாரம் செய்து, கூட்டங்களில் சொற்பொழி வாற்றினார். இவர் கைது செய்யப்பட்டு இதர தலைவர் களுடன் வேலூரில் சிறையிலிடப்பட்டார். 1940-ஆம் ஆண்டு விருதுநகர் முனிசிபல் கவுன்சிலில் மெஜாரிட்டி யாய் இருந்த காங்கிரஸ் கட்சி காமராஜரைச் சேர்மனாக தேர்ந்தெடுத்தது. 1941-ல் இவர் விடுதலையானதும் கவுன் சில் கூட்டமொன்றுக்கு வந்திருந்தார். சேர்மனாக இருக்கும் படி காமராஜரை வேண்டிக்கொண்டபோது, தாம் கட்சிப்

பணியில் மூழ்கியிருப்பதாகவும், கௌரவமிக்க சேர்மன் பணியைத் திறம்படச் செய்ய முடியாதென்றும் கூறி, இக் கௌரவத்தை ஏற்க மறுத்தார்.

அரசியல் அடிவானில் சத்தியமூர்த்தி கிளம்பியதும் காமராஜ் ஆர்வம் மிக்க ஆதரவாளராகவும் விசுவாசம் மிக்க உதவியாளராகவும் ஆனார். காமராஜரின் திறமை மிக்க அரிய நிறுவன ஆற்றலைக் கண்ட சத்தியமூர்த்தி தமிழ் நாட்டில் காங்கிரஸ் பணிகளை நிறுவ அவர் உதவியைப் பெற்றார். சத்தியமூர்த்தி ஒரு தேசியத் தலைவராவதற்கும் காமராஜ் பெருமளவுக்குப் பொறுப்பாளியாவார். சத்திய மூர்த்தி—காமராஜ் கூட்டு அசைக்க முடியாததொரு அம்ச மாகி, இந்நிலை இறுதிவரை நீடித்திருந்தது. காமராஜ் குன்றாத விசுவாசம் காட்டினார். காங்கிரஸ் கட்சியில் வாலிபர், ஊழியர்களை ஒழுங்குபடுத்தி உருவாக்கும் பணியை மௌனமாகச் செய்து, தாம் பின்னணியிலேயே இருந்தார். இதற்குச் சன்மானமாகச் சத்தியமூர்த்தி, காமராஜை தேசியத் தலைவராகவும் தம் ஒப்பற்ற வாரிசாக வும் செய்தார். சத்தியமூர்த்தி தாம் காரியதரிசியாய் இருப் பதிலேயே திருப்தி கொண்டு, காமராஜை மகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்க உதவி செய்தார். தலைவர் தன்னிடம் கொண்டுள்ள நம்பிக்கை சரியானது என்பதற்குச் சான்றாகத் தமிழ்நாட்டில் காங்கிரஸ் நிறு வனத்தைக் கட்டுக் கோப்பானதொரு நிறுவனமாக்கினார். சட்டசபையின் மூலம் சுதந்திரத்திற்காகப் போராடுவதி லேயே முற்றிலும் நம்பிக்கை கொண்டிருந்தார் சத்திய மூர்த்தி. சட்டமியற்றும் திட்டம் குறித்து, காமராஜ் சத்திய மூர்த்தி சொன்னதை ஒப்புக்கொள்ளாத போதும், அவர் சத்தியமூர்த்தியை ஆதரித்து, இத்திட்டத்திற்கு ஆதரவாக மக்கள் இயக்கத்திற்கு ஏற்பாடு செய்தார். இது மாபெரும் பணியாயிருந்தது. கர்ம வீரரான காமராஜ், தம் தலை வரைப்போல இடிமுழக்கச் சொற்பொழிவுகள் ஆற்றாமல் மௌனமாகவே ஆதரவு கோரினார். ராஜாஜிக்கும் சத்திய மூர்த்திக்கும் ஒரு மோதல் ஏற்பட்டது. காமராஜ் சத்திய மூர்த்தியிடமே விசுவாசம் கொண்டு, அவருக்குப் பின்னால் உறுதியாய் நின்று இளைஞர்கள் மற்றும் பொதுமக்களின் ஆதரவைத் திரட்டித் தந்தார்.

5

வெள்ளையனே வெளியேறு இயக்கம்

அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி, 1942 ஆகஸ்ட் 8-ந் தேதி பம்பாயில் கூடி பிரபல 'பாரதத்தை விட்டு வெளியேறு' தீர்மானத்தை நிறைவேற்றியது. 'செய்' அல்லது 'செத்துமடி' என்ற கோஷத்துடன் புதிய போராட்டத்துக்கு விறுவிறுப்பு ஊட்டுமாறு காந்திஜி காங்கிரஸ்காரர்களுக்கும், தேசாபிமானிகளுக்கும் அறிவுரை கூறினார். பிரிட்டிஷ் அரசு முன்னதாக விழிப்புற்று, இவ்வியக்கத்தை நடத்துவதற்கான சந்தர்ப்பம் அளிக்காமல் எல்லாத் தலைவர்களையும் கைது செய்ய ஆயத்தமாய் இருந்தது. பம்பாயிலிருந்து சென்னைக்கும் மற்றுமுள்ள இடங்களுக்கும் செல்லும் எல்லா ரயில் நிலையங்களிலும் போலீஸ்காரர்கள் பெருத்த எண்ணிக்கையில் நிறுத்தப்பட்டிருந்தனர். சஞ்சீவ ரெட்டியுடன் பம்பாயிலிருந்து ஆந்திரா செல்ல காமராஜ் திட்டமிட்டிருந்தார். ஆந்திராவை அடைவதற்கு முன்பே கூட தான் கைது செய்யப்படலாம் எனத் தெரியவந்ததும் அவர் தம் திட்டத்தை மாற்றி நேராகச் சென்னை செல்வதென முடிவு செய்தார். பம்பாயிலிருந்து திரும்பும் தலைவர்களைக் கைது செய்ய அரக்கோணம் பிளாட்பாரத்தில் போலீஸ்காரர்கள் நிறுத்தப்பட்டனர். போலீஸ்காரர்களின் கண்களில் படாமல் காமராஜ் ஸ்டேஷனை விட்டகன்றார். காமராஜ் பஸ்ஸில் ராணிப்பேட்டை சென்று, பழம்பெரும் காங்கிரஸ்காரரான கல்யாண ராமய்யர் இல்லம் அடைந்தார். போலீஸ்காரருக்கு அவர் இருப்பிடம் தெரிந்து விடுமாதலால், கல்யாணராமய்யர் காமராஜரை ஜனாப் முகமது சுலைமான் என்ற பிரபல அரிசி வியாபாரியிடம் அழைத்துச் சென்றார். உறுதியான தேசபக்தரான சுலைமான் தம் தோட்டத்துக் குடிசையொன்றில் காமராஜருக்கு இருக்கை தந்தார். பிறகு இரவில் போலீஸ்காரர் ஒருவர் தோட்டத்துக்குள் பிரவேசிக்க, தம்மைக் கைது செய்யப்

போலீஸ்காரர் வருகிறார் என நினைத்து காமராஜ் ஒரு அறையில் ஒளிந்து கொண்டார். 'என்ன வேண்டும்?' எனக் கல்யாண ராமய்யர் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரை வினவியதும், மறுதினம் போலீஸ் சூப்பரிண்டண்ட் வரப் போவதாகவும் அவருக்கு அந்த வீட்டில் இடம் கிடைக்குமாவென அறிய விரும்புவதாகவும் சப்-இன்ஸ்பெக்டர் கூறினார். சுலைமான் ஒப்புக் கொண்டார். சப்-இன்ஸ்பெக்டர் வீட்டைச் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, சூப்பரின்டெண்டுக்கு இந்த வீடு போதாதென்று கூறிச் சென்று விட்டார். சுலைமான், ஐயர், காமராஜ் மூவரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். பின்னர் கல்யாண ராமய்யரும், காமராஜரும் டாக்ஸியில் வாணியம்பாடி சென்று அங்கிருந்து தஞ்சாவூருக்கு ரயிலேறினர். செல்லும் வழியில் விழுப்புரம் ரயில் நிலையத்தில் கூட போலீஸாரின் கண்காணிப்பை மீறி, மறுநாள் காலை தஞ்சாவூரை அடைந்தனர். தஞ்சாவூரில் நாராயணசாமி என்ற ஒரு காங்கிரஸ் தலைவர் இல்லம் சென்று உள்ளூர் காங்கிரஸ் பிரமுகர்களைச் சந்தித்த பின் இவர்கள் ரயில் வழியாக திருச்சி பயணமாயினர். திருச்சி சந்திப்பில் போலீஸ்காரர்கள் பலர், காங்கிரஸ்காரர்கள் வருகிறார்களா எனப் பார்த்துக் கொண்டிருந்தனர். ரயில் பெட்டியின் மறுபுறத்திலிருந்து இவர்கள் கீழே இறங்கி, ரயில் பாதையைக் கடந்து, துண்டைத் தலையில் சுற்றி, வேட்டியை முழங்காலுக்கு மேலே தூக்கிக் கட்டிக்கொண்டு கிராமவாசிகள் போல உடையணிந்து ஒரு ஓட்டலுக்குச் சென்றனர். மற்றொரு காங்கிரஸ்காரரும் கணக்குத் தணிக்கையாளருமான எம். எஸ். ரெங்கசுவாமி என்பவர் இல்லத்தில் பணியாளர்களைச் சந்தித்துக் காரில் மதுரைக்குப் பயணமாயினர். மதுரையில் காங்கிரஸ் பிரமுகர்களையும் பணியாளர்களையும் கண்ட பிறகு திருநெல்வேலி ஜில்லாவில் சுற்றுப் பயணம் செய்ய காமராஜ் கல்யாண ராமய்யரை அனுப்பிவிட்டு, குமாரசாமி ராஜா (பிற்பாடு சென்னை முதன் மந்திரி)-வுடன் புறப்பட்டார். காமராஜ் விருதுநகர் திரும்பவே, போலீஸ் வாரண்ட் அவருக்காகக் காத்திருந்தது. கைதாக தாமே தயாராயிருந்தார். போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் இவரே சொன்னார். தேசியவாத உள்ளம் படைத்த அந்த சப்-இன்ஸ்பெக்டர், இதைப் பொருட்படுத்த வேண்டாமென்றும் அவரைப் பிற்பாடு கைது செய்வதாகவும் கூறினார். தம் வேலை எல்லாம் முடிந்து விட்டதால் தாமதிப்பதில் அர்த்தமில்லையென்றார் காமராஜ். காமராஜ்

கைதாகி, இதரர்களைப்போல் பாதுகாப்புச் சட்டத்தில் கீழ் வேலூர் சிறைச்சாலையில் வைக்கப்பட்டார். வேலூர் சிறைச்சாலையில் ஏற்கனவே பல தலைவர்கள் இருந்தனர். விசாரணையின்றி இவர் மூன்றாண்டுக்காலம் இங்கிருந்து விட்டு, 1945-ல் இதர தலைவர்களோடு சேர்ந்து விடுதலை பெற்றார்.

6

தந்தையாய் தாங்கும் தனியுருவம்

காமராஜ், 1945 ஜனவரியில் சிறையிலிருந்து வெளி வந்தபோது சென்னையில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்று விட்டிருந்தன. சத்தியமூர்த்தி 1943-ல் மார்ச்சில் கால மாகிவிட்டிருந்தார். ராஜாஜி 1942-ல் காங்கிரஸிலிருந்து ராஜினாமா செய்தார். (வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்பால் கண்டன நோக்குக் கொண்டு கருத்து வேறுபாடு ஏற்பட்ட பின்னர் ராஜாஜி காங்கிரஸ்காரர் களின் ஆதரவை இழந்தார்) பாகிஸ்தான் பிரச்சனை குறித்து இவர் கூறியது தவறாகக் கொள்ளப்பட்டது. ஜின்னாவின் தலைமையிலான முஸ்லிம் லீக் கட்சி, தன் நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, முகமதியர் கள் பெருவாரியாயிருந்த பகுதிகளைக் கொண்டு துணிக்கப் பட்ட பாகிஸ்தான் அமைப்பதற்கும் பாரதத்தைத் துண் டாக்குவதற்குமான ஓர் இயக்கத்தைத் துவக்கியது. சுதந்திரப் போராட்டத்துக்கு இந் நிபந்தனையை விதித்தார் ஜின்னா; இந்த இரு தேசக் கொள்கையை காந்திஜி, ஜவஹர்லால் நேரு, சர்தார் படேல், மற்றும் தலைவர்கள் ஏற்கவில்லை. மறுகையில் 'பாகிஸ்தான் அமைப்பதற்கான கருத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம்' (ராஜாஜிக்கே உரித்தான சொற் றொடர்களில் ஒன்றாகும் இது) சுதந்திரம் பெற முஸ்லீம் லீகின் ஆதரவைப் பெற விரும்பினார் ராஜாஜி. நேரடி யாகப் பாகிஸ்தான் அமைக்கும் எண்ணத்தை விரும்ப வில்லை; பாகிஸ்தான் அமைப்பதற்கான கருத்தை ஒப்புக் கொள்வது என்றுதான் சொன்னார். சுதந்திரம் பெற காங்கிரஸ் கட்சியுடன் முஸ்லீம் லீக் இணைந்திருக்கச் சாதக மாக இந்த ஏற்பாடு; சுதந்திரம் கிட்டிய பிறகு, முஸ்லீம் லீக் காங்கிரசுடன் ஐக்கியமாக இருப்பதற்கான சலுகையை அதற்களித்தவாறு இப்பிரச்சனை முழுவதையும் மக்கள்

தீர்வுக்கு விட்டு விடலாம் என்பது அவரது கருத்து. மக்களோ அல்லது காங்கிரஸ்காரர்களோ கூட முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாததொரு மிக்க தந்திரமான அபிப்பிராயம் இது. ராஜாஜி முஸ்லீம் லீக் ஆதரவாளர் என்றும் மக்களிடையே ராஜாஜி பற்றி ஒரு எண்ணம் ஏற்பட்டு விட்டது. தம் சடலத்தின் மீதுதான் இம்மாதிரியானதொரு பிரிவினை சாத்தியமானதென்றார் காந்திஜி. அவ்வமயம் ராஜாஜிக்கு அவப்பெயர் வருவதற்கு இது மேலுமொரு பெரிய காரணம். ஆனபடியால் ராஜாஜி ஓய்வு பெற்றார். மூன்றாண்டு காலத்துக்கு அரசியலிலிருந்தும் காங்கிரஸ் கட்சியிலிருந்தும் விலகி இருந்தார். காமராஜ் உட்பட பிரபல தலைவர்களில் பெரும்பாலோர் சிறையிலிருந்தபடியால் தமிழ்நாட்டில் பிரபல தலைவர்கள் வேறொருவரும் இல்லை. காமராஜ் மற்றுமிதர தலைவர்களோடு 1945-ல் விடுதலையானார். தமிழ்நாட்டில் நிலவியிருந்த நிலைக்கு வலுவான தலைமை தேவைப்பட்டது. ராஜாஜியும் காமராஜூம் ஒன்று சேர்ந்து, இவர்களின் கூட்டுத் தலைமையில், தமிழ்நாடு காங்கிரஸ் வலிமை பெற்றுவிடுமென்ற கருத்துக் கொண்டனர். ராஜாஜியின் நெருங்கிய ஆதரவாளர்களில் சிலர், வரும் தேர்தலை முன்னிட்டு காங்கிரஸ் வலிமை பெற வேண்டியது அவசியம் எனக் கருதியதால் இரு தலைவர்களும் சந்தித்தனர். தங்களிடையே வேறுபாடு இல்லை என்பதற்குச் சான்றாக ராஜாஜியும், காமராஜரும் தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்ய வேண்டுமென ராஜாஜி அபிப்பிராயம் தெரிவித்தார். துரதிஷ்டவசமாக இது நிறைவேறவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் ராஜாஜி என்றதொரு அறிக்கையைக் கண்டு திகைப்புற்றார், விருது நகர் சென்றிருந்த காமராஜ். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராயிருந்த காமராஜூக்கு இது குறித்துத் தம்முடன் கலந்தாலோசிக்கப்படவில்லை அல்லது தெரிவிக்கப்படவில்லை எனப் பெருத்த ஏமாற்றம். காங்கிரசிலிருந்து ராஜினாமா செய்திருந்த ராஜாஜியை அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கவே காங்கிரஸ் அக்ராசனர் மௌலானா அபுல்கலாம் ஆசாத், திரும்ப அவரைக் காங்கிரசில் சேர்த்துக் கொண்டார் என்பது காமராஜருக்குத் தெரியாது. காமராஜ், இத்தேர்தல் செல்லாதெனச் சவால் விடுத்தார். இவர்கள் உறவில் இது ஒரு திருப்பு முனையாயிற்று. இவர்களிடையே இருந்த விரிசல் விசாலமாயிற்று. காங்கிரஸ்

அக்ராசனர் மௌலானா ஆசாத் உள்ளிட்ட மத்திய தலைவர்களுள் இடைவிடாத சச்சரவு நிலவியது. சர்தார் படேல் இதைத் தீர்க்க முயன்றார். படேலின் அறிவுரையின் பேரில், காமராஜ், ராஜாஜியைச் சந்தித்து, இருவரும் ஓர் ஒப்பந்தத்திற்கு வந்தனர். இந்த ஒப்பந்தத்தின்படி, எட்டு உறுப்பினர் அடங்கிய பார்லிமெண்டரி போர்டுக்கு மூன்று பேரை ராஜாஜியும் மூன்று பேரை காமராஜும் பொறுக்கி எடுப்பர். இந்த ஏற்பாடு திருப்திகரமாகச் செயல்படுமெனக் கருதப்பட்டது.

1946-ம் வருடத் துவக்கத்தில் இந்திப் பிரச்சார சபை வெற்றி விழா வைபவங்களுக்குத் தலைமை தாங்கிப் பேச காந்திஜி சென்னை வந்தார் அரிஜனங்களுக்கு திறந்துவிடப்பட்டிருந்த மதுரை, பழனி ஆலயங்களுக்குச் செல்ல அவருக்கு அழைப்பு விடப்பட்டது. இவ்வமயம் ராஜாஜி சென்னைப் ‚பிரதமரா (முதன் மந்திரி) யிருந்தார். காந்திஜி சென்னை, மதுரை, பழனி ஆகிய இடங்களுக்குச் சென்றிருந்த போது தமிழ்நாட்டில் ராஜாஜி திரும்பக் காங்கிரஸ் தலைமைப் பதவியேற்றதற்கு எதிர்ப்பு இருப்பதாக அறிந்தார். அரிஜன் பத்திரிகையில் எழுதுகையில் காந்திஜி ராஜாஜிக்குப் பாராட்டு அளித்தவாறு ராஜாஜியை எதிர்த்து ‘‘கருத்து வேறுபாடு கொண்டதொரு கும்பல்’’ வேலை செய்கிறதென வருத்தப்பட்டார். ராஜாஜியின் மதிக்கத்தக்க சேவையைத் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் இழந்து விடுவரென காந்திஜி அவர்களை எச்சரித்தார். ராஜாஜியே சென்னைப் பிரதமராயிருக்கச் சாலச்சிறந்தவர் என விஜய வாடாவில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தார். இயற்கையாகவே இது காமராஜருக்குப் பிடிக்கவில்லை. ‘‘கருத்து வேறுபாடுள்ள கும்பல் ஒன்று’’ என காந்திஜி கூறியது காமராஜ் மீதும் அவர் தோழர்கள் மீதும் பிரதிபலிப்பதாகவுள்ளதென நினைத்தார் காமராஜ். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தம்மிடம் நம்பிக்கை இல்லையென்பதை இது காட்டுகிறதெனத் தோன்றியதால் தமிழ்நாடு பார்லிமெண்டு போர்டிலிருந்து காமராஜ் ராஜினாமா செய்தார். பார்லிமெண்டரி நிகழ்ச்சி நிரலில் தமக்கு நம்பிக்கையில்லாமற்போயினும் சுதந்திரம் பெற நாடு நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவூட்டும் ஒரு உபாயமாக அதை ஒப்புக் கொள்வதாக தம் நிலையை விளக்கியவாறு நீண்ட தொரு அறிக்கை வெளியிட்டார். அவருக்குப் பார்லிமெண்டரிப்

புரோக்கிராமினால்தான் இச்சச்சரவெல்லாம் எழுந்தது என்று தோன்றியது. காந்திஜி அவருக்கு வேண்டுகோள் விடுத்தும், பார்லிமெண்ட் நிகழ்ச்சி நிரலிலிருந்து விலகி யிருப்பதெனச் செய்த முடிவைக் காமராஜ் மாற்ற வில்லை.

ராஜாஜியைக் கலந்தாலோசித்துத் தமிழ்நாட்டில் தேர்த லுக்கான நபர்களைப் பார்லிமெண்ட் போர்டு பொறுக்கி எடுத்தது; ஆனால் இறுதியில் ராஜாஜி பொறுக்கியெடுத்த வர்களைக் கொண்டதொரு மந்திரிசபை அமைக்கப்பட்டது. தமிழ்நாடு காங்கிரஸ் குழுவுக்குத் தாம் பிடித்தவராக இல்லை என்பதை உணர்ந்த ராஜாஜி திடீரென வெளி யேறியதோடு, தாம் ஓய்வுபெறுவதாக காந்திஜிக்கு எழுதி விட்டார்.

சென்னை மாகாணத்தில் 1946-ம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரஸ் அமோக வெற்றிபெற, காமராஜ் அருப்புக் கோட்டைத் தொகுதியிலிருந்து எதிர்ப்பின்றிச் சட்டசபைக் குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னையில் காங்கிரஸ் மந்திரிசபைக்கு யார் தலைமை வகிப்பதென்ற பிரச்சனை அச்சுறுத்தியது''. இறுதியில் அனுபவமிக்க ஆந்திர கேசரி டி. பிரகாசம் சொற்ப மெஜாரிட்டியில் தெரிந்தெடுக்கப் பட்டார். ஆரம்பத்திலிருந்தே பிரகாசத்துக்கும், காமராஜூக் கும் சச்சரவு துவங்கியது. மந்திரிகளைப் பொறுக்கியெடுப்ப தில் காமராஜைப் புறக்கணித்து தனக்கே உரித்த வழிமுறை களைக் கையாண்டார். பிரகாசம் உறுதியான உள்ளம் படைத்தவர்; நிர்வாகத்தை நடத்த இவர் காமராஜரையோ, அல்லது வேறெவரையுமோ ஒருபோதும் கலந்தாலோசிக்க வில்லை. சீக்கிரத்திலேயே பிரகாசம் வெறுக்கப்பட்டு, சில மாதங்களில் தலைமைப் பதவியிலிருந்து தள்ளப்பட்டார்.

எளிய, நேர்மையுள்ள, காந்தியவாதி ஓமந்தூர் ராம சாமி ரெட்டியார் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கும் காமராஜூக்கும் ஒத்துப்போகவில்லை. ராஜபாளையத்தைச் சேர்ந்த குமாரசாமி ராஜா தலைமைப் பதவியேற்றார்.

இந்தத் தலைமைப் பதவி மாற்றங்களிலெல்லாம் காமராஜ் முக்கியப் பங்கு வகித்தார்.

7

கட்சித் தலைமைப் பதவியேற்பு

1952-ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல்களில் சென்னையில் காங்கிரசுக்குப் பின்வாங்கல் ஏற்பட்டது. காங்கிரஸ் கட்சி அந்நாளைய பெருவாரி மெஜாரிட்டியை இழந்தது. 375 இடங்களில் காங்கிரசுக்கு 152 இடங்களே கிடைத்தன. ஆனால் தனிப்பட்டதொரு பெரிய கட்சியாகவே அது இருந்தது. எதிர்த் தரப்பு மாறுபட்ட கருத்துக்களும் கொள்கைகளும் கொண்ட ஆறு கட்சிகள் அடங்கியதொரு விநோதமான கும்பலாயிருந்தது. கம்யூனிஸ்டு, சோசலிஸ்டு, கிசான் மஸ்தூர், பிரஜா, கிரிஷேக் லோக், தமிழ்நாடு உழைப்பாளர், காமன் வீல் ஆகியவைகளாவன அவை. தேர்தலில் தோல்வியுற்ற குமாரசாமி ராஜா தம் மந்திரி சபை ராஜினாமாவைச் சமர்ப்பிக்க, காமராஜ் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முக்கிய சிற்பியாயிருந்தபடியால் இப்பின்வாங்கல் அவரை வெகுவாகப் பாதித்தது. எனினும் காங்கிரஸ் கட்சி மட்டுமே அரசு அமைக்க முடியாதென்பதையும், தம்மை விட்டிருந்தால் தாம் எதிர்கட்சியை அரசு அமைக்கவிட்டிருப்பார் என்பதையும் உணரும் அளவுக்கு அவர் மதிநுட்பம் பெற்றிருந்தார். இம்மாதியானதொரு மந்தரிசபை நீண்ட நாட்கள் நீடிக்காதென்பதும், காங்கிரஸ் அதன் கரத்தை வலிவுறச் செய்து, அதிகாரத்தை மேற்கொள்ள, பின்னர் அதற்கு வாய்ப்பிருக்காதென்பதும் காமராஜருக்குத் தெரியும். பிரகாசத்தின் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி (யுனைடெட் டெமாக்ரடிக் ஃப்ரண்ட்) மந்திரிசபை அமைக்கத் தயாராயிருந்தது. ஆனால், புதிய சட்டமன்றத்தின் பெருவாரியான காங்கிரஸ் உறுப்பினர்கள் புதிய அரசியல் சட்டம் அமுலாகும்போதே காங்கிரஸ் அல்லாத அமைச்சரவையை விரும்பவில்லை. சென்னையின் புதிய ஆளுநர் ஸ்ரீ ஸ்ரீ பிரகாசாவும் தாம் கவர்னர் பதவியைத் துவங்குகையிலேயே காங்கிரஸ்காரரர்கள் அல்லாத மந்திரி

சபையை விரும்பவில்லை. காங்கிரஸ் காரியக் கமிட்டி நிலமையை நன்கு ஆலோசித்த பிறகு இந்த வாய்ப்பைக் காங்கிரஸ் நழுவ விட்டுவிட்டு, மாகாணத்தில் எதிர்க்கட்சி மந்திரிசபை அமைவதை விரும்பவில்லை. எனவே பொறுப்பை ஏற்குமாறு காரிய கமிட்டி, காங்கிரஸ் கட்சிக்கு அறிவுரை கூறவே, நிலைமையைச் சமாளிக்கக் கூடியதொரு தலைவரைத் தெரிந்தெடுப்பது அடுத்த நடவடிக்கையாயிற்று. பல பெயர்கள் முன்மொழியப்பட்டு, ஆலோசிக்கப்பட்டன. ஆனால் கடினமான இச்சூழ்நிலையில் உறுதியாகத் தலைமை தாங்குபவராக இவர்களில் எவரும் இல்லை. இக்கட்டத்தில் தான் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, மற்றுமுள்ளோர் போன்ற நன்மனச் செம்மல்கள் ஒன்றுகூடி, நிலமையை நன்கு சமாளித்து, ராஜாங்கக் கப்பலைத் திறமையுடன் ராஜாஜி ஒருவர்தான் செலுத்த முடியுமென்ற ஒருமித்த முடிவுக்கு வந்தனர்.

மத்திய மந்திரிப் பதவி, வங்கக் கவர்னர் பதவி, பாரதத்தின் முதலாவது கவர்னர் ஜெனரல் பதவி ஆகிய வற்றை வகித்த பின்னர் ராஜாஜி ''அக்ஞாதவாசம்'' மேற்கொண்டிருந்தார். அதைவிட்டு மாகாணத்தையும் காங்கிரசையும் காக்கும் பணியைப் புரியுமாறு அவர் வேண்டிக்கொள்ளப்பட்டார். மனமின்றி நிர்ப்பந்தத்திற்குப் பணிந்தார். ஆனால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காமராஜ் இதற்குச் சம்மதித்து, தமக்கு ஆதர வளிப்பாரென்பதை நிச்சயம் செய்து கொள்ள விரும்பி னார் ராஜாஜி. அவர் காமராஜைச் சந்தித்து அவரைக் கேட்டு, அவர் தடையில்லை எனக்கூறி, ஆனால் கட்சி, அரசு அமைக்கக் கூடாதென்ற கருத்தைத் தெரிவித்தார். இறுதியில் இது குறித்துக் காங்கிரஸ் சட்டசபைத் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேருவுக்குத் தகவல் தெரிவிக்கப் படவே, முதன் மந்திரி முறைப்படி சட்டசபையின் தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினராயிருக்க வேண்டுமானபடியால் ராஜாஜி சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டு மென்ற அபிப்பிராயங் கொண்டார் நேரு. ராஜாஜி இவ் விஷயத்தில் தமக்கே உரித்தான கருத்துக்களும், சொந்தச் செயல் வழியும் கொண்டிருந்தார். இவர், காங்கிரஸ் சட்ட சபைத் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வுடன் இடைக்கால மந்திரி சபையில் முதன் மந்திரியா யிருந்த குமார சாமி ராஜாவுக்குத் தம்மைச் சட்டக் கவுன்சிலில்

(மேலவை உறுப்பினராக) நியமிக்கலாமென்ற அபிப் பிராயம் கூறினார். தேர்தல் தொல்லையை எதிர்கொள்வது என்பது எப்போதுமே ராஜாஜிக்குப் பிடித்தமானதில்லை. இம்மாதிரியான விஷயங்களில் இவருக்குக் குறுக்கு வழியே பிடித்தமானது. அதோடு அவரது உடல் நிலையும் வயதும் கடினமான தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட இடங்கொடுக்க வில்லை. ஜனநாயகச் செய்முறை எவ்வளவுதான் சிறப்பு மிக்கதாயிருப்பினும் சில சமயங்களில் எதிர்பார்ப்புக்கு மாறுபட்ட விளைவை ஏற்படுத்துமென்பது ராஜாஜி கருத்து. பிற்பாடு அசெம்பளியில் கண்டனம் செய்யப்பட்டபோது தாம் தேர்ந்தெடுக்கப்படும் தொகுதிக்குப் பிரதிநிதியாயிருப்ப தற்குப் பதில், இப்போது தம்மைத் தேர்ந்தெடுத்துள்ள உறுப்பினர்களின் 150 தொகுதிகளுக்கும் தாம் பிரதிநிதி யாகி விட்டதால், தம் நிலை நியாயமானதென்றே கூறினார் ராஜாஜி. ராஜாஜி ஒருவரால் தான் இம்மாதிரி வியத்தகு பதில்கள் சொல்ல முடியும்.

புதிய மந்திரிசபை அமைக்க ராஜாஜி அழைக்கப் பட்டார். அரசியல் புத்திகூர்மையுடன் அவர் கணிசமான உறுப்பினர் இருந்த உழைப்பாளர் கட்சி நிறுவகரும் தலை வருமான மாணிக்க வேலுநாயக்கரைத் தம் மந்திரிசபையில் சேர்த்துக் கொண்டு காங்கிரஸ் கட்சிக்கும் தம் மந்திரி சபைக்கும் ஆதரவைப் பெருக்கினார். ஐக்கிய முன்னணி எதிர்கட்சி, பிளவுண்டு போக, எதிர்க்கட்சி பலம் குன்றியது.

பன்னிரண்டு ஆண்டுக் காலத்துக்கு வகித்து வந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவியை காமராஜ் ராஜினாமா செய்தார். 1952-ல் தாம் லோக் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டபடியால், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தம் முழு நேரத்தையும் செலவிட முடியாதென்பது அவர் கூறிய காரணம். அதோடு பணி தடையின்றி நடைபெறச் சாதகமாக, ராஜாஜிக்குப் பிடித்த மான ஒருவர் காங்கிரஸ் கமிட்டித் தலைவராயிருக்க வேண்டு மெனத் தோன்றியது காமராஜுக்கு.

பாரிஸ்டர் டாக்டர் பி. சுப்பராயன் ராஜாஜியிடம் பாசங் கொண்டவர். ராஜாஜிக்குச் சொந்தமான சேலம் ஜில்லாவைச் சேர்ந்தவரென்பதோடு, இவருக்கு ராஜாஜி வக்கீலாகவும் தோழராகவும் குருவாகவும் இருந்திருக்கிறார்.

டாக்டர் சுப்பராயன் இந்தோனேசியாவில் பாரதத் தூது வராகிச் செயலாற்றிய பின் அப்போது தான் திரும்பி யிருந்தார். இவரைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவ ராகத் தேர்ந்தெடுக்கலாமென ராஜாஜி அபிப்பிராயம் தெரிவித்தார். சுப்பராயன் முதலில் தயங்கினார்; ஆனால் இறுதியில் இவர் சம்மதிக்கவே இவர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுப்பராயன் சிறிது காலத்திற்குத்தான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராயிருந்தார். இவர் உடற் பயிற்சி விளையாட்டுக்களில் நல்ல விருப்பமுள்ளவர். கலகலப்பான மனிதர்; ஓர் அரசியல் நிறுவனத் தலைவர் என்ற பதவிக்குரிய கடுமையான பணி அவரது இயல்புக்கு அதிகச் சுமையாயிற்று. ஓராண்டு காலத்துக்குள் இவர் ராஜினாமா செய்தார். காமராஜரைத் தவிர இப்பொறுப்பை ஏற்க வேறெவருமில்லை. காமராஜ் மறுபடியும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

8

ராஜாஜி—காமராஜ் கூட்டு

காங்கிரஸ் வட்டாரத்தில் பொதுப்படையான மகிழ்ச்சி நிலை நிலவியது; ராஜாஜி நிர்வாகத் தலைவராகவும், காமராஜ் காங்கிரஸ் கட்சித் தலைவராகவும் கூடிய ராஜாஜி காமராஜ் கூட்டு எதிர்க்க முடியாததொன்று எனவும் மாகாணத்திற்கு நன்மை பயக்கும் எனவும் எல்லோரும் நினைத்தனர். இரு தலைவர்களும் எப்போதும் இல்லாத வாறு இப்போது மேலும் நெருக்கமாயினர். சென்னையில் காமராஜ் உருவப்படத்தைத் திறந்து வைக்கையில், காங்கிரஸ் கட்சிக்கும் மக்களுக்கும் காமராஜ் ஆற்றியுள்ள சேவைக்காக ராஜாஜி அவரைப் பாராட்டினார். காமராஜ் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராயிருக்கையில் காங்கிரஸ் நிறு வனம் குறித்துத் தமக்குக் கவலையில்லையென ராஜாஜி கூற, ராஜாஜி முதன் மந்திரியாயிருக்கும் போது நிர்வாகம் பற்றி தமக்குக் கவலையில்லையெனக் கூறினார் காமராஜ். துரதிஷ்டவசமாக, ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் இந்தப் பரஸ்பர நிலை அதிக காலம் நீடிக்கவில்லை. கண்பட்டு விட்டது போலும்; ஓராண்டு காலத்துக்குள் ராஜாஜி ராஜினாமா செய்ய வேண்டியதாயிற்று. சொற்ப கால ஆட்சியில் ராஜாஜி சில துணிச்சலான பயனுள்ள நடவடிக்கைகளைக் கொணர்ந்தார்.

உணவு தானியங்களின் மீதான எல்லாக் கட்டுப்பாடு களையும் அகற்றி, உணவு தானியப் பங்கீடு முறையை ரத்து செய்தது இவர் செய்த முதற்பணி. மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியதாயிருக்க வேண்டிய பங்கீடு முறையும் கட்டுப்பாடுகளும் கள்ள மார்க்கெட், செயற்கைப் பற்றாக் குறை, பதுக்கலுக்கு வழிவகுத்தன. ராஜாஜி கட்டுப்பாடு களையும் பங்கீடு முறையையும் அகற்ற, இதனால் நல்ல பலன் கிட்டி, திறந்தவெளி மார்க்கெட்டில் அரிசி சுலப மாகக் கிடைத்தது. பண்ணையாள் சட்டத்தை (பண்ணை யாட்கள் என்போர் விவசாய வேலையாட்கள்) அமுல் நடத்துவதன் வழி. தஞ்சாவூர் ஜில்லாவில் நிலக்குத்தகைச்

சீர்திருத்தத்தை நடைமுறைக்குக் கொணர்ந்தது அவரது மற்றொரு துணிகர நடவடிக்கையாகும். ராஜாஜி எடுத்த இந்தத் துணிகர நடவடிக்கை கம்யூனிஸ்டுகளின் பிடியைத் தளர்த்தியது; தஞ்சை ஜில்லாவில் விவசாய ஊழியர்களை நிலச் சுவான்தார்களுக்கு எதிராகத் தூண்டி விட்டு அவர் களிடமிருந்து நிலத்தைப் பறிக்க திட்டமிட்டுக் கொண்டிருந்த அவர்களின் எண்ணத்தில் மண் விழுந்தது.

பள்ளி செல்லக்கூடிய குழந்தைகளெல்லாம் கல்வி கற்க வகை செய்யும் நூதனத் திட்டம் ஒன்றை, அமலுக்குக் கொணர்ந்தது அவர் மேற்கொண்ட 3-வது துணிகர நட வடிக்கையாகும். பெருவாரிக் குழந்தைகளைச் சேர்த்துக் கொள்ளப் போதுமான ஆசிரியரும், பள்ளிக் கட்டிடங் களும் இல்லாமை முக்கிய முட்டுக் கட்டைகளில் ஒன்றா யிருந்தது. புதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் பயிற்சி பெற்ற உபாத்தியாயர்களை அடைவதற்கும் பெருத்த நிதி செலவாவதோடு அதிகக் காலமும் பிடிக்கும், ஆனபடியால் அவ்வமயம் கிடைக்கக் கூடிய கட்டிடங்களையும் ஆசிரியர் களையும் கொண்டு ''ஷிப்டு முறை'' என்றதொரு முறையை ராஜாஜி தோற்றுவித்தார். இதோடு ராஜாஜி பள்ளி நேரத்தை மூன்று மணியாகக் குறைக்கவும் விரும்பினார். குழந்தைகள் கல்வி பயிலும் பயனடைவதோடு பரம்பரைத் தொழில் செய்வதும் குடும்பத்தின் வருவாயைக் போதுமான வரைக்கும் பெருக்குமாதலால் குடும்பத் தொழிலைக் குழந்தை கள் செய்யலாமென்ற அபிப்பிராயத்தையும் கூறினார். சாதி முறையை நிலைநிறுத்தச் செய்யும் தந்திரமான பிராமணச் சதிச் செயல் என திராவிடக்கழக வகுப்புவாதத் தலைவர் கள் இது குறித்து உடனடியாக மறுப்புக் கூறினர். இத் திட்டத்திற்கெதிராக அபிப்பிராயங்கள் வலுப்பெற்று, நிலைமை ராஜாஜிக்கெதிரானதொரு கொந்தளிப்பாயிற்று. ஆழ்ந்து ஆலோசித்து, நன்மை பயக்கத்தக்கதென தமக்கே நம்பிக்கை ஏற்பட்ட பிறகுதான் ராஜாஜியே எந்த ஒரு முக்கிய நடவடிக்கையையும் எப்போதும் எடுப்பார். ஒரு முறை ஒரு முடிவெடுத்து விட்டால் பிறகு அவரை அசைக்க முடியாது. பிறரைக் கலந்தாலோசிக்காமல் முக்கியமான விஷயங்களைக் குறித்த முடிவுகளை ஏறக்குறைய தாமேதான் எடுத்து வந்தார். இந்த விஷயத்தில் தம் மந்திரி சபைச் சகாக்களைக் கூட (அவர்களுக்கும் இது ஒரு திகைப்பாகவே இருந்தது) இவர் கலந்து ஆலோசிக்கவில்லை; இம்மாதிரி

முக்கியமான கொள்கை முடிவுகள் எடுக்கையிலோ அல்லது சட்டமியற்றும் பணி துவக்குகையிலோ முதன் மந்திரி சாதாரணமாக மந்திரி சபையைக் கலந்து ஆலோசிக்க வேண்டும். ராஜாஜி இயல்பாகவே தம்மிச்சைப்படி நடப்ப வராகவே இருந்தார்; சரியெனத் தமக்குத் தோன்றியதைச் செய்தார். அவர் தமக்கே உரிய தனிமுறையில்தான் பணி களை எப்போதும் செய்து வந்தார். (இவரது எதிராளி களும், இவரது தோழர்களில் சிலரும் கூட தவறாக நினைப்பது போல) இது திமிரினால் அல்லாமல் தான் செய்வது நேர்மையானதென்று கருதும் பிறவிக்குணம் காரணமாக, மிக்க திகைப்பூட்டக் கூடிய, ராஜாஜியின் பல செயல்களை அவரிடம் அளவு கடந்த விசுவாசமும் நம்பிக்கை யும் கொண்ட ஆர்வமுள்ளவர் தான் புரிந்து கொள்ள முடியுமென அவரது மிக நெருங்கிய நண்பர்களில் ஒரு வரும் பிரபல எழுத்தாளரும் பத்திரிகையாசிரியருமான கல்கி. கிருஷ்ணமூர்த்தி கூறுவதுண்டு. இத்திட்டம் அறிவிக்கப் பட்டபோது பலர் திகைப்புற்றது போல காமராஜருக்கும் பெருத்த திகைப்புண்டாக்கியது. இதைக் கைவிடுமாறு ராஜாஜிக்கு அவர் ஆலோசனை கூறினார். இத்திட்ட எதிர்ப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது; காங்கிரஸ் காரர்கள் கூட இதைக் கண்டனம் செய்தனர். ராஜாஜி ஆட்சி காலத்தில் சென்னை பிரிக்கப்பட்டு, ஆந்திரா தனிப்பட்டதொரு ராஜ்யமாயிற்று.

ராஜாஜியின் தலைமையை எதிர்த்து 1954-ல் காங்கிரஸ்காரர்கள் தீவிரமானதொரு கையெழுத்து இயக்கத் தைத் தொடங்கினார். மார்ச் மாதம் சட்டசபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. உடல்நலம் குன்றியதால் ராஜினாமா செய்வதாக (ராஜாஜியின் திடீர் திகைப்புச் செயல்களுள் மேலும் ஒன்று) ராஜாஜி திடீரென்று அறி வித்தார். கட்சியின் தலைமைப் பதவி பற்றிய பிரச்சனை மறுபடியும் வந்தது. தன்னை ஆர்வமிக்க முறையில் பின் பற்றுபவர்களில் ஒருவரான சி. சுப்ரமணியத்தைத் தேர்ந் தெடுக்க ராஜாஜி முயன்றார். கட்சி உறுப்பினர்களில் பெரும்பாலோர் இதற்குச் சம்மதப்படவில்லை. கட்சியில் ஏறக்குறைய நெருக்கடி நிலை நிலவியது. இந்நிலையில் காமராஜைத் தவிர வேறொருவரும் இடத்தை நிரப்ப முடியாதென்பது அநேக உறுப்பினர்களுக்குத் தோன்றியது. மந்திரியாகவோ அல்லது முதல் மந்திரியாகவோ வர

காமராஜ் ஒருபோதும் விரும்பவில்லை. பொறுப்பை ஏற்கச் சம்மதித்து நிலைமையைச் சமாளிக்குமாறு உறுப்பினர்கள் காமராஜை வேண்டினர். இறுதியில் அவர் சம்மதித்தார். காமராஜின் பெயரும், சி. சுப்ரமணியத்தின் பெயரும், (ராஜாஜியின் நிர்ப்பந்தத்தின் பேரில்) முன்மொழியப் பட்டன. பெருத்த மெஜாரிட்டியில் காமராஜ் சட்டசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்படியிருந்தும் முதன் மந்திரியாக வர விரும்பவில்லை. சிக்கல்களை அறியத் தக்க அவ்வளவு மதிநுட்பம் வாய்ந்தவர் காமராஜ். மிக்க சக்தி வாய்ந்த, கட்சித் தலைவராக இருப்பதையே உசிதமாகக் கருதியிருந்தார். காங்கிரஸ் அக்ராசனர் பண்டித நேருவை யும், பண்டித கோவிந்த் வல்லப பந்தையும் கலந்தாலோசித் தார். காமராஜ் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராய் இருப்பதையே உசிதமாகக் கருதியபோதிலும் அவர்கள் இரு வரும், பொறுப்பை ஏற்குமாறு காமராஜைக் கேட்டுக் கொண்ட னர். தம் ஆதரவாளர்கள் எல்லோரையும் திருப்தி செய்ய முடியாதென்பதைக் காமராஜ் அறிந்திருந்தது மற்றொரு காரணம்; ஆதரவாளர்களில் அநேகர் மந்திரி பதவிகளிலும் இதர பதவிகளிலும் ஆர்வம் கொண்டிருந்தனர். காங்கிரஸ் அக்ராசனர் பண்டித நேரு, பண்டித பந்த், மற்றும் இதரர் களைக் கலந்து ஆலோசிக்கக் காமராஜ் டில்லி சென்றார். முதல் மந்திரிப் பதவியை ஏற்குமாறு அவர்கள் காமராஜிடம் கூறினர். கட்சிப் பிரமுகர்கள் காமராஜ் முதல் மந்திரியா யிருக்க வேண்டுமென விரும்பின் அவர்கள் காமராஜை நிர்ப்பந்தம் செய்யக் கூடாது அல்லது சலுகை காட்டும்படி கோரக்கூடாது எனக் கட்சி உறுப்பினர்கள் வாக்குறுதி செய்ததன் பேரில் காமராஜ் இறுதியாக ஒப்புக் கொண் டார். ராஜாஜி ஏப்ரல் 8-ந் தேதியன்று ராஜினாமா செய் தார். காமராஜ் தமிழ் புத்தாண்டு தினமான 1957 ஏப்ரல் 13-ந் தேதியன்று பதவிப் பொறுப்பேற்றார். முன்பொரு முறை காமராஜும் கலந்துகொண்டிருந்த, திருச்சியில் நடை பெற்றதொரு பொதுக்கூட்டத்தில் ''இவ்வளவு திறமையான காரிய நிர்வாகியும் தேசாபியுமான காமராஜ் ஒருநாள் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் சர்க்கார் தலைவராவார்'' என்று அவரது அரசியல் குருநாதர் சத்திய மூர்த்தி சொற் பொழிவாற்றும்போது கூறிய கணிப்புரை, நினைவிலிருந்து அகலாத அத் ; ்த் திருநாளன்று மெய்யாயிற்று. தமிழ் நாட்டு மக்கள் ப்பருமகிழ்ச்சியுற்றது போலவே சத்திய மூர்த்தியின் ஆத்மாவும் மகிழ்ச்சியுற்றிருக்கும்.

9

இன்னல்களை எதிர்கொண்டார்

காமராஜ் முதல்வர் பதவியேற்றவுடன் பழைய மந்திரிகளில் சிலரை இருத்திக் கொள்வதன் மூலம் தம் நெருங்கிய ஆதரவாளர்களை ஏமாற்றமடையச் செய்தார். பல இதரார்களையும் அநேக நபர்களையும் திகைப்புறச் செய்தார். எம். பக்தவச்சலம், சி. சுப்ரமணியம், எம். ஏ. மாணிக்கவேலு ஆகியோர் இருத்திக் கொள்ளப்பட்ட மந்திரிகள்; திருமதி லூர்தம்மாள் சைமன், ஆர். வெங்கட்ராமன், சி. ராமய்யா, பி. கக்கன் ஆகிய நான்கு புதிய மந்திரிகளை நியமித்தார். ஆர். வெங்கட்ராமன் வக்கீலும், தொழிற்சங்கத் தலைவருமாவார். ஆதிநாட்களிலிருந்தே காமராஜருடன் இருந்தவர். இவர் லோக்சபை உறுப்பினராகி 1952-ல் தேர்ந்தெடுக்கப்பட்டு 1957 வரை லோக்சபை உறுப்பினராயிருந்தார். லோக்சபை விவாதங்களில் பெயர் வாங்கியிருந்தார். காமராஜ் அவருக்குக் கைத்தொழில் மற்றும் தொழில்துறைப் பொறுப்பைக் கொடுத்தார். தமிழ்நாட்டிலிருக்கும் கைத்தொழில்களுக்கு ஊக்கம் அளித்தும், சிறுதொழிலதிபர்களுக்கு உதவியளித்தும் இவர் புகழ் பெற்றார். சென்னைக் கருகேயுள்ள கிண்டி தொழிற்பேட்டை இவரது சாதனைகளுக்கானதொரு அழியாச் சின்னமாக விளங்குகிறது. தமிழ்நாட்டை முன்னுதாரணமாக்கியவாறு, பல சிறு தொழில்கள் வளம்பெறத் துவங்கின. கக்கன் அடக்கமான எளிய அரிஜனத் தலைவர்; இவரை மந்திரியாக்கி காமராஜ் இவரை முன்னுக்குக் கொணர்ந்தார். இதுவரை எவரும் அறியாத கிறிஸ்தவப் பெண்மணியான லூர்தம்மாள் சைமனும் காமராஜரின் உடன்பிறவாச் சோதரியாய் விளங்கினார். இவரை மந்திரிசபையில் சேர்த்து ஒரு கல்லால் இரு பறவைகளை அடித்தார் காமராஜ்; மாதர் பிரதிநிதியாயிருந்ததோடு கிறிஸ்தவச் சிறுபான்மையினராகவும் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்தவராயுமிருந்தார். மாநிலங்கள்

புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டம் திருவாங்கூரிலிருந்து தமிழ்நாட்டுக்கு மாற்றப்பட்டிருந்தது.

காமராஜ் பதவியேற்றதையடுத்து ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தாலுகாவில் தீவிர சச்சரவு மூண்டது; தேவர்களுக்கும், (மாவட்டத்தில் சக்தி மிக்கதொரு சமுதாயத்தினர்) அரிஜனங்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. தேவர் வகுப்பைச் சேர்ந்த சக்தி மிக்க தலைவரான முத்துராமலிங்கத் தேவருக்கும் அரிஜன கிறிஸ்துவத் தலைவரான இமானுவெல்லுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. தேவர்களின் ஆட்கள் இமானுவெல்லைக் கொலை செய்துவிட்டதாகக் கூறப்பட்டது. குற்றவாளிகளைப் பிடித்துக் கலவரத்தை அடக்கப் போலீசார் கீழ்த்தூவலுக்குச் சென்ற போது ஒரு கூட்டம் போலீசாரைத் தாக்கியது. ஆயுதம் தாங்கிய கூட்டத்தினரைப் போலீசார் சுட்டபோது, ஐவர் கொல்லப்பட்டனர். உயர்தர சிவிலியன் அதிகாரி விசாரணை நடத்த அரசு உத்தரவிட்டது. அவர் சமர்ப்பித்த அறிக்கை போலீஸ் சுட்டது நியாயம் என்றே கூறியது. இந்த அறிக்கையினால் தேவர்களோ சட்டசபை எதிர்க்கட்சியினரோ திருப்தியடையாது நீதித்துறை விசாரணை செய்யக் கோரினர். கம்யூனிஸ்டு கட்சி, மந்திரிசபைக்கெதிரே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர அது தோற்றுப் போயிற்று. இறுதியில் கலவரங்கள் அடக்கப்பட்டன. சச்சரவுக்குக் காரணம் வேறு என்பதைக் காமராஜ் கண்டு கொண்டார். ராமநாதபுரம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டு விட்டன என்பதைக் காமராஜ் தன் மதிநுட்பத்தினால் அறிந்து கொண்டார். தேவர்கள், அரிஜன மக்களின் வீடுகளை திரும்பக் கட்டிக் கொடுத்ததோடு விவசாய மற்றும் தொழில் துறைகளில் இந்தப் பிற்போக்கு வட்டாரத்தை அபிவிருத்தி செய்வதற்கானதொரு திட்டத்தையும் துவக்கி வைத்தார்.

பிரச்சனைகளின் மூலகாரணங்களைக் கண்டறிந்து அவற்றைத் தீர்த்து வைப்பதற்குக் காமராஜ் கையாண்ட திறமையான முறை அவரது அறிவாற்றலுக்கு மேலுமொரு உதாரணமாகும்.

10

காமராஜ் திட்டம்

1962-ம் ஆண்டில் நடைபெற்ற மூன்றாவது பொதுத் தேர்தலில் காங்கிரசுக்குப் போதுமான பெரும்பான்மை இருந்தபோதிலும், சட்டசபையில் பதின் மூன்று இடங்களை அது இழந்தது. சி. என். அண்ணாதுரையின் ஆற்றல்மிகு தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம், 50 உறுப் பினர்களைக் கொண்டு பலமானதொரு எதிர்க்கட்சியாகத் தோன்றியது. தி. மு. கழகத்தின் தந்திரமான தேர்தல் இயக் கம், வகுப்பு விரோத வித்துக்களை விதைத்தது; இது கண்டு காமராஜ் மிக்க கவலை கொண்டார். தேர்தலுக்குப் பிறகு நடந்த காங்கிரஸ் காரிய கமிட்டிக் கூட்டத்தில் பிரிவினை வாதம் அரசியல் சட்டத்துக்கு விரோதமானதென்பது உணரப்பட்டது. ஒவ்வொரு நபரும் தாம் பாரதத்தின் இறையாண்மையையும் முழுமையையும் காப்பதாகப் பிரமாணம் செய்ய வேண்டுமென்று அரசியல் சட்டத் திருத்தத்தைப் பார்லிமெண்ட் நிறைவேற்றியது. உடனடி யாக, தி. மு. க. தன் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்ட தாக சி. என். அண்ணாதுரை அறிவித்தார்.

காங்கிரஸ்காரர்களிடையே பதவி மோகம் நிலவியது கண்டு காமராஜ் மிகவும் வருத்தமுற்றார்; இது அவருக்குப் பிடிக்கவில்லை; இதைத் தவிர்க்க விரும்பினார். காங்கிரஸ் சீர்கெட்டுப் போனதைப் பார்த்து அதைச் சீர்செய்ய விரும்பி னார். எதிர் கட்சிகள், வகுப்புவாத, குறுகிய மனப்பான்மை கொண்டு செயல்படுகின்றன என்பதையும் கண்டார். முக்கியமாக முற்றிலும் தேசியவாதியாயிருந்த காமராஜ், இந்த நோயை நிறுத்த விரும்பினார். காங்கிரஸ்காரர்கள் இத் திசையில் தங்கள் எண்ணங்களையும் செயல்களையும் இப் போது திருப்ப வேண்டுமென்றும் காமராஜ் நினைத்தார்; இல்லாவிடில் காங்கிரஸ் கட்சி மட்டுமேயல்லாமல் நாடும் துன்பப்படுமாதலால் காங்கிரஸ் தலைவர்கள் நந்நோக்கத் தோடு பாடுபட வேண்டுமென்று இவர் விரும்பினார். பதவியிலிருந்து விலகி, காங்கிரஸ் கட்சியை நன்கு

வலுவாக்கும் செயலில் ஈடுபட்டு தாம் ஓர் உதாரணம் உருவாக்க வேண்டுமென்பது இவர் விருப்பம். உபதேர்தலில் காங்கிரஸ் கட்சி அடுத்தடுத்து இருமுறை தோல்வியுற்றதால் இவர் மிக்க ஆலோசித்தார். காங்கிரஸ் கோட்டையான திருவண்ணாமலையில் ஒரு தோல்வி. அங்குப் பத்து நாட்களுக்கு காமராஜ் தேர்தல் இயக்கத்தில் ஈடுபட்டிருந்தார். இந்நிலையை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று உறுதி பூண்டார். ஆகையால் பதவியை விட்டு விலகி, கட்சியைச் சீரமைத்து, வலிவுறச் செய்ய வேண்டுமென்று முடிவு செய்தார். தி. மு. க. மக்களிடையே நெருங்கிக் கலந்து அதன் செல்வாக்கைப் பலப்படுத்தி வருகையில், காங்கிரஸ் மக்கள் தொடர்பை இழந்து வருகிறதென்பதை உணர்ந்தார். தலைமை வகிப்பாற்றல் பற்றாமையாலும் சரியான நபர் தேர்ந்தெடுக்கப்படாததாலும் காங்கிரஸ் திருவண்ணாமலையில் தோல்வியுற்றது என்பதும் காமராஜுக்குத் தெரிந்தது. நேர்மையான நபர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லாததும் மற்றுமொரு முக்கிய காரணம். நேர்மையான ஆட்கள் அதிகமாயிருந்து, கட்டுக்கோப்பான நிறுவன ஏற்பாடுகளும் தி. மு. க.—வுக்கு இருந்தபடியால் அது காங்கிரசுக்கு ஒருபடி மேலாயிருந்தது; ஆகையினால் காங்கிரசுக்குப் புத்துணர்வூட்டி, அதை வலிவுறச் செய்ய விரும்பினார். காமராஜ் 1963 ஜூலையில் ஐதராபாத்தில் பிரதமர் நேருவைச் சந்தித்தபோது, முதல்வர் 'பதவியிலிருந்து விலகி கட்சிக்குப் புத்துணர்வூட்டும் பணியில் ஈடுபட்டுச் செயல்பட விருப்பமிருப்பதாகத் தெரிவித்தார். காமராஜின் பேச்சாற்றலை அறிந்த பிரதமர், இத்திட்டத்தை நாடு முழுவதுமே அமலுக்குக் கொண்டு வரலாமென்ற விருப்பந் தெரிவித்தார். இத்திட்டத்தைக் காங்கிரஸ் காரியக் கமிட்டி விவாதித்தது; இக்கமிட்டி இத்திட்டத்தை மனமார வரவேற்றது. பண்டித நேருவே உதாரணங் காண்பித்து பிரதமர் பதவியைத் துறக்க விருப்பந் தெரிவித்தார். இந்த நடவடிக்கைக்கு ஒருமனதாக காங்கிரஸ் காரியக் கமிட்டி எதிர்ப்புத் தெரிவித்து, இம்மாதிரியானதொரு நடவடிக்கை காங்கிரசுக்கும் நாட்டுக்கும் கேடுவிளைவிக்குமாதலால், ராஜினாமா செய்ய வந்ததைப் பிரதமர் நேரு நிறுத்திக் கொண்டார்.

காமராஜ் திட்டத்தின் கீழ் எல்லா மத்திய மந்திரிகளும், முதன் மந்திரிகளும் ராஜினாமா செய்தனர். மொரார்ஜி

தேசாய், எஸ்.கே. பாடில், ஜெகஜீவன் ராம், லால்பகதூர் சாஸ்திரி, ஸ்ரீமாலி, கோபாலரெட்டி ஆகிய ஆறு மந்திரி களின் ராஜினாமாக்களை மட்டுமே பண்டித நேரு ஒப்புக் கொண்டார். வேண்டாத மந்திரிகளை வெளியே தள்ளத் தந்திரமாகச் செய்யப்பட்ட திட்டம் காமராஜ் திட்டமென்று கூடத் தவறாகக் கூறப்பட்டது.

11

ஆற்றல் மிக்க அருந்தலைவர்

புத்தாண்டு பிறந்ததும் நல்லவைகளும் நிகழ்ந்தன; தீயவைகளும் நேர்ந்தன. சோவியத் பிரதமர் கோஸிஜன் யோசனையின் பேரில் பாரதமும் பாகிஸ்தானும் பேச்சு வார்த்தைகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சோவியத் யூனியன் தாஷ்கண்டில் பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியும் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் அயூப்கானும் சந்தித்து, இரு நாடுகளுக்குமிடையேயிருந்த சச்சரவு குறித்து ஓர் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. ஒப்பந்தம் கையெழுத்தான கையோடு பேராபத்து நிகழ்ந்தது; உஸ்பெக் தலைநகரில் லால்பகதூர் சாஸ்திரி மாரடைப்பினால் உயிர் நீத்தார். இந்த உடன்படிக்கையினால் பாரதம் முழு அளவுக்கு மகிழ்ச்சியடையும் முன்னதாக, சாதிக்க முடியாத தைச் சாதித்த பிரதமரின் பிரிவினால் நாடே துக்கத்தில் மூழ்கியது. லால்பகதூர் மாபெரும் துணிவுடன் திடமான செயலாற்றல் கொண்டு பாகிஸ்தான் ஆக்கிரமிப்பை உறுதி யாக எதிர்க்க உத்தரவிட்டபோது அத்துணிகரச் செயலால் அவரது நன்மதிப்பு வானை எட்டியது; இறுதியில் வெற்றி கிட்டியது. ''மூர்த்தி சிறிது ஆனாலும் கீர்த்தி பெரிது'' என்பது தமிழ் பழமொழி. அமைதிக்கோர் ஆடவராயினும் அருஞ்சமர் வந்தபோது அளவு கடந்த துணிவு காண்பித் தார்.

இவர் உயிர் நீத்ததும், வாரிசு தேடும் பிரச்சனையை நாடு மறுபடியும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. இப் பிரச்சனையைத் தீர்க்க காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடியது. இப்பதவியைப் பெற விரும்பியவர்களில் மொரார்ஜி தேசாயும் ஒரு பிரதான புள்ளி. காமராஜும், சிண்டி கேட்டும் அவர்பால் கொண்டிருந்த போக்கை மாற்ற வில்லை; அவருக்குச் சாதகமாக முடிவெடுக்க அவர்கள் விரும்பவில்லை. வேறு யார் தகுதியானவராக இருக்க முடியும்? இக்கேள்விக்கு விடைகாணச் சிண்டிகேட்டும் காமராஜும் கூடி முயன்றனர். வழக்கப்படி காமராஜ்

ஒருமனதான முடிவையே விரும்பினார். மொரார்ஜி முறைப் படியானதொரு தேர்தலில் போட்டியிடுவதை விரும்பினார். தாம் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படக் காமராஜின் ஆதர வையும் வேண்டினார். ஒருமனதான முடிவெடுக்க காங்கிரஸ் காரியக் கமிட்டி காமராஜருக்கு அதிகாரம் அளித்தது. ஒருமனதான முடிவு சாத்தியமில்லையெனில் பார்லிமெண்ட் கட்சி ஒரு நபரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மறுபடியும் பார்லிமெண்ட் உறுப்பினர், முதன் மந்திரி கள், ராஜ்ய காங்கிரஸ் உறுப்பினர்கள் தீவிரமாகக் கலந் தாலோசித்தனர். காமராஜ், இந்திரா காந்தி வருவதையே விரும்பினார்.

இதற்கு முன்பு, அதுல்ய கோஷும், சிண்டி கேட்டைச் சேர்ந்த இதர உறுப்பினரும், காமராஜ் அவர்களையே இப்பொறுப்பேற்கச் சம்மதிக்கச் செய்ய முயன்றனர். காமராஜ் விரும்பியிருந்தால் அவர் இதைச் சுலபமாகப் பெற்றிருக்க முடியும். ''என்னை இதில் இழுக்காதிருந்தால் நல்லது'' என்று அவர் கூறியதாகச் சொல்லப்படுகிறது. கேட்காமலேயே வந்தபோது பதவியைச் சிறிதும் விரும்பாத துணிவுள்ள மனிதர் இவர் என்பது புலனாயிற்று.

பிரதமர் பதவி தேடி வந்த சமயம் அப்பதவியை வெறுத்தார். வெகுசிலரே இவ்வகை மனப்பான்மை கொண் டிருப்பர். இவரது கௌரவம் மறுபடியும் வானை எட்டியது. பதவி மோகம் இவர் உள்ளத்தைக் கெடுக்க முடியாது. சர்ச்சைக்கிடமில்லாதவரும் இதரர்களின் கருத்துக்களை யொட்டி நடந்து கொள்ளக்கூடியவருமாக இருக்கக் கூடிய ஒரே நபர் திருமதி இந்திரா காந்தி தான் எனக் கருதினார் காமராஜ். இந்திரா காந்தி காங்கிரஸ் அக்ராசனாயிருந்த தோடு, அகில இந்தியப் புகழ் பெற்றவருமாயிருந்தார். தகப்பனாரின் ஒளி வட்டமும் பெற்றிருந்தார். நாட்டின் வாக்காளர்களில் பாதிப் பேர் மகளிர்; அவர்கள் ஆதரவு இவருக்கு உறுதி. காங்கிரஸ் கட்சியினர் ஆட்சி செலுத்திய ராஜ்ய முதன் மந்திரிகள் திருமதி இந்திரா காந்திக்காகத் தீவிரப் பிரச்சாரம் செய்தனர். மொரார்ஜி தேசாய், பார்லிமெண்ட் உறுப்பினர்களுக்கு எழுதியதொரு பகிரங்கக் கடிதத்தில், ''சொந்த விருப்பு, வெறுப்புகளை உதறித் தள்ளும் அவர்களின் விசேடப் பொறுப்பை அவர்களுக்கு

எடுத்துரைத்து தங்கள் உரிமையை வலியுறுத்துமாறு'' அவர்களை வேண்டிக்கொண்டார்.

காமராஜ் மொரார்ஜி தேசாயைச் சந்தித்துப் போட்டியிலிருந்து விலகிக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டார். மொரார்ஜி ஏன் என்று கேட்டார். ஸ்ரீமதி காந்திக்குப் பெரும்பான்மை ஆதரவு இருக்கிறதெனக் காமராஜ் கூற, வாக்கெடுப்பு மூலம் இதற்கு முடிவு செய்ய வேண்டுமென்றார் மொரார்ஜி தேசாய். சமாதானப் பேச்சு மூலம் காமராஜ் இதைத் தீர்க்கச் செய்த முயற்சிகள் வீணாயின.

பத்தொன்பதாம் தேதி காமராஜ் தலைமையில் காங்கிரஸ் சட்டப் பேரவைக் கட்சி கூடியது. வாக்கெடுப்பின் பயனாக ஸ்ரீமதி இந்திரா காந்தி பெருத்த மெஜாரிட்டியில் வென்றார். காமராஜ், ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு நல்வாழ்த்துக் கூறி புதுத் தலைவருக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்குமாறு வேண்டினார். மொரார்ஜி தேசாய், ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு நல்லாசி வழங்கி ''தம் சுயகௌரவத்திற்குத் தக்கவாறு'' தாம் ஒத்துழைப்பதாகக் கூறினார். நிலைமையைச் சமாளித்து, தேர்தல் நடத்திய முறைக்காக காமராஜை அனைவரும் வாயார வாழ்த்தினர். 'ஒருமனத் தீர்மானம்' செய்ய அவரெடுத்த முயற்சி இம்முறை வெற்றி பெறாத போதிலும், அவர் அரசியல் சட்ட நியமங்களை அனுசரித்து, ஜனநாயகப் பாதையைப் பின்பற்றினார். காங்கிரஸ் அக்ராசனரின் கௌரவம் பெருகியது.

லால்பகதூர் சாஸ்திரி பிரதமர் மந்திரியாயிருந்த போது அவருக்கும் தமக்குமிடையே நெருங்கிய, சுமூக உறவை உருவாக்கினார் காமராஜ். தேசியக் கொள்கை சம்பந்தமான எல்லாப் பெரிய விவகாரங்கள் குறித்தும் பிரதமருக்கும் காங்கிரஸ் அக்ராசனருக்குமிடையே ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளத்தக்க அதே நெருங்கிய உறவு இருக்க வேண்டுமென்பது இவர் விருப்பம்.

அவர் பார்லிமெண்ட் பழக்க வழக்கங்களுக்கு மதிப்புக் கொடுத்தார். சர்க்கார் எடுக்கும் அன்றாட முடிவுகளில் காங்கிரஸ் அக்ராசனரோ அல்லது காங்கிரஸ் காரியக் கமிட்டியோ தலையிடக்கூடாதென்றும் விரும்பினார். பெரிய கொள்கை சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மந்திரி சபைக்கும் கட்சி ஏற்பாட்டுக்குமிடையே உச்ச அளவு ஒன்றிணைப்பு இருக்க வேண்டுமென்பதும் இவர் அவா.

காங்கிரஸ் கட்சியில் நல்லொழுக்கமிருக்க வேண்டு மென்பதில் காமராஜ் பிடிவாதமாயிருந்தார். ராஜ்யங்களில் காங்கிரஸ் நிறுவனங்களில் உட்பூசல்கள் தலைதூக்கின. இது காங்கிரஸ் அக்ராசனருக்கு ஒரு தலைவலியாயிருந்தது. ஆனால் காமராஜரோ காங்கிரசுக்குள் ஒற்றுமையைக் குலைக்கவிருந்த இம்மாதிரியான நல்லொழுக்கமின்மையை யும் கருத்து வேறுபாடுகளையும் களைந்தெடுத்தார்.

கேரளத்தில் ஒரு நெருக்கடி எழ, மாநில மந்திரி சபையிலிருந்த சில அமைச்சர்கள் முதல்வர் சங்கருக்கு எதிராகக் குற்றப் பத்திரிகையொன்றை அனுப்பினர். கட்சிக்குள்ளேயே குற்றச்சாட்டுக்களை ஆலோசிக்கும் முன் அவற்றைப் பிரச்சாரம் செய்தது குறித்துக் காமராஜ் வருத் தம் அடைந்தார். இறுதியாக மாநில சட்டசபையில் மந்திரி சபைக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று கொண்டு வரப்பட்டது. 1965-ல் இதையடுத்து நடந்த தேர்தல்களில் கேரள காங்கிரசுக்கு மெஜாரிட்டி கிடைக்கா மற் போயிற்று. எக்கட்சிக்கும் மெஜாரிட்டி இல்லை. மாநிலத்தில் மறுபடியும் கவர்னர் ஆட்சியைக் கொணர வேண்டியிருந்தது. 1967-ம் வருடத் தேர்தலுக்குப் பின் இடதுசாரிக் கூட்டணி, ஆட்சிக்கு வந்தது. பல்வேறு லட்சியங்களைக் கொண்ட கட்சிகளாலான கூட்டு அதிக நாள் நீடிக்காதென அவர் அறிவாராதலால் அவர் கவலை கொள்ளவில்லை.

பஞ்சாபிலும் ஒரிஸ்ஸாவிலும் மந்திரிசபை, கட்சி நெருக்கடி எழவே, காமராஜ் அவற்றை உறுதியுடன் கையாண்டார். ஜவகர்லால் நேரு பிரதமராயிருக்கையில் முதல்வர் பிரதாப் சிங் கைரானுக்கு விரோதமாகப் பஞ்சாபில் கண்டனங்களும், புகார்களும் எழுந்தன. குற்றச் சாட்டுகளை விசாரிக்க நேரு ஒரு குழு நியமித்தார். பெரிய குற்றச்சாட்டுகளில் சில நிரூபிக்கப்பட்டனவென இக்குழு கூறியது. நேருவுக்குப்பின் பிரதமரான லால்பகதூர் சாஸ்திரியும், காமராஜும் கைரானை ராஜினாமா செய்ய வைத்தனர். நேர்மை மிக்க அடக்கமான ராம் கிஷன் என்பவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கக் காமராஜே பொறுப்பு. அஸ்ஸாமில் முதல்வர் பரூவா கருத்து வேறு பாடு கொண்டபோது காமராஜ் தலையிட்டதால் மந்திரி சபை நெருக்கடி தவிர்க்கப்பட்டது. அவர் பரூவாவை ராஜினாமா செய்ய சொன்னார்; காங்கிரஸ் தலைவருக்குக்

கீழ்ப்படிவதைத் தவிர பரூவாவிற்கு வேறுவழியில்லாது போயிற்று. இவ்வாறு ஒரு நெருக்கடி தவிர்க்கப்படவே காமராஜரின் புகழ் மேலும் ஒருபடி உயர்ந்தது. ஆற்றல்மிகு அருந்தலைவர், காங்கிரஸ் கப்பலைத் திறமையாகச் செலுத்தினார்.

12

அனைத்துலக வித்தகர் ஆதல்

காமராஜ் தற்போது, உச்சநிலைத் தேசியதலைவராகி விட்டார். இவரது பெயரும் புகழும் அயல் நாடுகளுக்குப் பரவின. அமெரிக்காவும், சோவியத் யூனியனும் வருகை தருமாறு இவருக்கு அழைப்புகள் விடுத்தன. நாட்டில், நிலவியிருந்த நிலைமைகளை உத்தேசித்து காமராஜ் இந் நாடுகளுக்குச் செல்வதை ஒத்திப்போட வேண்டியிருந்தது.

கோஸிஜின் பாரதம் வந்தபோது காமராஜை சோவியத் யூனியனுக்கு வரும்படி மீண்டும் கேட்டுக் கொண்டார். லால்பகதூர் சாஸ்திரியின் ஈமக்கிரியைக்கு வந்தபோது அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஹெர்வர்ட் ஹம்ஃப்ரி, காமராஜை ''மாபெரும் அரசியல் தலைவர்களில் ஒருவர்'' என வருணித்து அமெரிக்காவுக்கு வருமாறு அவரை அழைத்தார். சோவியத் யூனியனின் அழைப்பை ஏற்று, மே மாதம், அங்கு விஜயம் செய்ய திட்டமிட்டிருந்தார் காமராஜ். ஆனால் நாட்டில் ஏற்பட்ட நிலைமை காரணமாகப் பயணத்தை ஜூலை மாதத்துக்கு ஒத்திப்போட வேண்டியதாயிற்று. காமராஜ் ரஷ்யா சென்றபோது, தமிழ்நாடு அரசில் அப்போது தொழில் அமைச்சராயிருந்த திரு. ஆர். வெங்கட்ராமன் இவருடன் சென்று, இவருக்கு விளக்க உரையாளராயிருந்தார். சோவியத் பயணம் காமராஜருக்குத் தனிச் சிறப்பு வாய்ந்த பயணமாயிற்று. மாஸ்கோவில் காமராஜரை பிரதமர் கோஸிஜின், கம்யூனிஸ்டு கட்சித் தலைமைச் செயலர் பிரஷ்னேவ் ஆகியோர் வரவேற்றனர்.

காமராஜருக்கு க்ரெம்லினில் பார்லிமெண்டரி குழுக் கமிட்டி விருந்தளித்தது. இவர் முக்கிய நகரங்களுக்குச் சென்றதோடு, மாஸ்கோவையும் சுற்றிப் பார்த்தார். அம் மக்கள் தற்போதுள்ள உயர்நிலையை அடையச் சாதகமாயிருந்த அவர்களுடைய நல்லொழுக்கமும் கடின உழைப்பும் இவரை மிகவும் கவர்ந்தன. மக்களிடையேயிருந்து வந்த, மக்கள் மதிக்கும் மாமனிதர் என்ற முறையில் காமராஜ்

சோவியத் தலைவர்களையும், மக்களையும் கவர்ந்தார். இவரது எளிமையும், ஆடம்பரமின்மையும் சோவியத் மக்கள், தலைவர்களின் பாராட்டுதலைப் பெற்றன. தம் நாட்டில் அணிவதைப் போன்றே அவர் அங்கும் உடை அணிந்தார். தமிழ்நாட்டு பாணியில் வேட்டி, முக்கால் கைச்சட்டை, ஒரு துண்டு ஆகியவையே அவரது ஆடை—தூய வெள்ளை கதராடை. விருந்துகளுக்குச் செல்கையிலோ, அரசாங்க விழாக்களுக்குச் செல்கையிலோ அதிகாரபூர்வமான உடை எதுவும் ஒருபோதும் அணிந்ததில்லை. இவரது இயற்கை யான நடத்தையும், எளிய பாமர ஆடையும் கொண்ட தோற்றங்காரணமாகச் சோவியத் மக்கள் இவரை வியந்து போற்றினர். காமராஜ் தம்மோடு தொடர்பு கொண்ட தலைவர்களுடனும், இதரர்களுடனும், நடந்து கொண்ட முறை எளிமையாகவும், நேரியதாகவும் இருந்தது. அவர்கள் வினவிய வினாக்களுக்கு அவர் அளித்த பதில்கள் காரண மாகவும் அவர்களுடன் போற்றத்தக்கவாறு பல்வேறு விஷயங்களைக் கெட்டிக்காரத்தனமாக விவாதித்த முறையி னாலும், தன்னம்பிக்கை, கபடமின்மை காரணமாகவும், அவரால் அவர்களுக்குச் சரிசமமாக இருக்க முடிந்தது. காமராஜ் மிக்க மதிநுட்பம் வாய்ந்தவர்; நாட்டுக்கு பாதக மாக இருக்கத்தக்க எந்த வார்த்தையையும் தவறுதலாகக் கூடக் கூறிவிடமாட்டார். தன்னம்பிக்கை கொண்டிருந்தபடி யால் உயர்ந்த பிரபல நபர்களோடு அவரால் இயல்பாகப் பேச முடிந்தது. தாம் ஒரு பெருந்தலைவர் என்ற மனப் பாங்கு இவரிடம் சிறிதுமில்லை.

பத்து நாட்கள் சோவியத் யூனியனில் சுற்றுப் பயணம் செய்த பிறகு, காமராஜ் கிழக்கு ஜெர்மனி, செக்கோஸ்லா வாகியா, ஹங்கேரி, பல்கேரியா, யுகோஸ்லாவியா ஆகிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றார். இந்நாடுகளி லெல்லாம் இவருக்கு எதிர்பாராத அமோக வரவேற்பு கிட்டியது. இவர் மார்ஷல் டிட்டோவுடன் நெருங்கிய முறையில் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்; மார்ஷல் டிட்டோ பாரதத்திற்கு வந்திருந்தபோது ஆவடி காங்கிரசில் காமராஜைச் சந்தித்தார்.

காமராஜின் ரஷ்ய, கிழக்கு ஐரோப்பிய விஜயம் அவருக்குச் சிறந்த அனுபவத்தை அளித்தது. நிதானமாகவும், இச்சோதனைகளைத் தாங்கி, பெருமிதத்துடன் திரும்பி னார். இதற்கு முன்னர் இலங்கை, மலேசியா சென்றது தவிர இதுவே இவரது முதலாவது, மேனாட்டுப் பயணம்.

சுற்றுப் பயணத்துக்குப் பிறகு காமராஜ் சென்னை திரும்பியதும், முன்னர் கண்டிராததொரு அமோக வரவேற்பு அவருக்குக் காத்திருந்தது; அவரது குரு சத்திய மூர்த்தி அயல்நாடு சென்று திரும்பியதை நினைவூட்டியது. இதுசமயம் காமராஜ் சர்வதேசப் புகழ் எய்தினார். இவர் சென்ற நாடுகளிலெல்லாம் மிகச் சிறந்த அபிப்பிராயத்தை ஏற்படுத்தியிருந்ததோடு, பாரதத்தின் நிலையும், உருவமும் மாறாமலிருந்தன. பாரதம் குறித்து அந்நாடுகளின் கருத்து தட்டி எழுப்பப்பட்டு, பாரதத்தின் கூட்டு சேராக் கொள்கை மிகப் பாராட்டப்பட்டது.

அடுத்த ஆண்டுவரை காமராஜின் அமெரிக்க விஜயம் ஒத்தி வைக்க வேண்டியதாயிற்று. துரதிருஷ்டவசமாக இது நடைபெறவில்லை. டி. சஞ்சீவய்யாவுக்கு அடுத்தபடியாக புதியதொரு அக்ராசனரைத் தேர்ந்தெடுப்பது குறித்து ஆலோசிக்க 1963 அக்டோபரில் காங்கிரஸ் காரிய கமிட்டி கூடியது; சஞ்சீவய்யாவின் பதவி காலம் 1963-ம் வருடம் இறுதியில் முடிவுற்றது. ஆந்திரப் பிரதேச தலைவர் சஞ்சீவ ரெட்டி, மைசூர் முதன் மந்திரி நிஜலிங்கப்பா, வங்கப் பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அதுல்ய கோஷ், காமராஜ் ஆகியோர் (அரசியல் நோக்கர்களாலும் பத்திரிகைகளாலும் 'சிண்டிகேட்' என அழைக்கப்பட்ட இவர்கள்) திருப்பதியில் வெங்கடேசப் பெருமான் முன்னிலையில் நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளை, முக்கியமாக காங்கிரஸ் அக்ராசனர் பதவி குறித்தும், நேருவுக்குப் பிறகு ஒருவரை பிரதமராகத் தேர்ந்தெடுப்பது குறித்தும் விவாதத்தினர். அவ்வமயம் நாட்டில் நிலவியிருந்த நிலைமையில் அக்ராசனரை ஒருமனதாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது உணரப்பட்டது. நாட்டு விவகாரங்களைப் பயனளிக்கத் தக்க முறையில் கட்டுப்படுத்த ஒரு வகையான கூட்டுத் தலைமையாற்றல் பெற, அவர்கள் ஒன்றாகச் செயலாற்ற வேண்டுமென்பது மற்றொரு முக்கியமான முடிவு. மிக்க மூத்த தலைவராயிருந்த மொரார்ஜி தேசாய் பற்றிச் சிந்தனை இருந்தது. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே பலமானதொரு எதிர்ப்பும் மொரார்ஜிக்கு எதிரான துவேஷமுமில்லாதிருந்தால், அவர் நேருவுக்குப் பிறகு பிரதமர் இடத்தைப் பெற்றிருக்கலாம். ஆகையால் லால்பகதூர் சாஸ்திரி மிக்க ஏற்றுக்கொள்ளக்கூடிய நபராயிருந்தார். காங்கிரஸ் அக்ராசனர் பதவிக்கு அதுல்ய கோஷோ,

காமராஜோ தேர்ந்தெடுக்கப்படுவதாயிருந்தது. நேரு, காமராஜையோ ஆதரிக்க, காரியக் கமிட்டி ஒருமனதாக முன்மொழிந்தது. காங்கிரஸ் அக்ராசனர் பதவி தமக்குக் கிடைக்குமென காமராஜ் ஒருபோதும் கனவுகூடக் காண வில்லை. இவர் அதைத் தேடவில்லை. சந்தர்ப்பவசத்தாலும் ஒன்றுசேர நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளாலும் உயர்நிலை பெற்றார். அவருடைய நிர்வாகத்திறன் காரணமாகவும் சென்னை முதன் மந்திரியாயிருந்து அரசுத் துறையில் காண்பித்த அறிவாற்றல் காரணமாகவும் காமராஜின்பால் நேரு மாபெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். பாரத தேசிய காங்கிரசின் சகாப்தத்தில் மூன்றாவது முறையாக ஒரு தமிழர் இத்தேசிய கௌரவத்தைப் பெற்றார். சேலம் சி. விஜயராகவாச்சாரியாரும், எஸ். ஸ்ரீனிவாச அய்யங்காரும் இதர இருவராவார்.

பல காரணங்களை உத்தேசித்து நேரு காமராஜைத் தெரிந்தெடுத்தார். காமராஜின்பால் நேரு கொண்டிருந்த கருத்து ஒருபுறமிருக்க, முக்கியமாக ''காமராஜ் திட்ட''த் துக்குப் பின்னர், காமராஜ் தேசியத் தலைவராகி விட்டிருந் தார். காங்கிரஸ் கமிட்டியிலோ அல்லது வெளியிடங் களிலோ இவர் இடிமுழக்கமான சொற்பொழிவுகள் நிகழ்த் தாத போதிலும், இவரது 'அமைதியான அறிவாற்றல், எடுத்ததை முடிக்கும் உறுதிப்பாடு காரணமாக எல்லோ ருடைய நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றார். ஆரம்ப கட்டங்களில் இவரை அசட்டை செய்து இருந்தவர்கள் இவரைப் புகழ்ந்து, மதிப்புக் கொடுத்தனர்.

புவனேஸ்வரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில், ''ஜனநாயக சோஷலிசம்'' காங்கிரசின் நோக்கம் என்பது நிர்ணயிக்கப்பட்டது. அரசியல் அகராதியில் இது புதிய தொரு ஏற்பாடாயிருந்தது. காங்கிரஸ் கட்சியிலுள்ள இடது சாரி அம்சங்கள் மிக்க பிரபலமடைந்திருந்தன. அவற்றின் செல்வாக்கு உணரப்பட்டது. நேருவே நிலையானதொரு சோஷலிஸ்ட். காங்கிரஸ் கட்சியின் தலைமையில் காந்திஜி இருக்கையில், நேரு சோஷலிசத்துக்காகப் போராடினார். ஆனால் அவர் ஒருபோதும் வன்முறைகளை அங்கீகரிக்க வில்லை. அவரது சமத்துவ சமுதாயவாதம் (சோஷலிசம்) காந்திஜியின் உயர்ந்த அகிம்சை லட்சிய வாதத்தினால் பதப்படுத்தப்பட்டது. காமராஜும் சோஷலிசவாத லட்சியங் களை விரும்பினார். ஆனால் அவரும் தீவிர அகிம்சாவாதியாக

இருந்தார். காமராஜ் எப்போதும் சோஷலிசக் கருத்தைச் சாதாரணப் பொதுமக்களின் பார்வையிலேயே நோக்கி னார். அவர் இந்த மண்ணின் ஒரு மைந்தர்; சமதர்ம வாதம் ஏழை மக்களுக்குச் சிறந்த வாழ்க்கையை வழங்க முடியு மானால் அதை ஏற்பதில் தவறில்லை என்பது அவரது கருத்து.

காங்கிரசின் நோக்கத்தை மாற்றிய புவனேசுவர் காங்கிரசின் தீர்மானம், அகிம்சை வழிகள் மூலம் ''ஜன நாயக சோஷலிஸ'' வாதத்தை வலியுறுத்தியது. கோபா வேசம் கொண்டவர்கள் மேலும் காரசாரமான வார்த்தை கள் கொண்ட தீர்மானத்தை விரும்பியிருப்பினும், காமராஜின் பதற்றப்படாத ஆனால் திண்மைவாய்ந்த மனநிலை, தீர் மானத்தை நிறைவேறச் செய்தது. ஒற்றுமையைக் கண்ணியத் துடன் காப்பதே காமராஜின் முக்கியப்பணி. இம்முயற்சி யில் பெரிதும் வெற்றிபெற்றார்.

நேரு மறைவுக்குப் பிறகு, லால்பகதூர் சாஸ்திரி, காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காமராஜ் நிலைமையை திறமையாகக் கையாண்டதால் லால்பகதூர் சாஸ்திரி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜனாதிபதி ராதாகிருஷ்ணனின் ஆலோசனையின் பேரில் காமராஜ் காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சியைக் கொண்டு தலைவராக தேர்ந்தெடுக்கும் பணியைத் துவக்கி வைத்தார். ஒருமனதாக தலைவரைத் தேர்ந்தெடுக்குமாறு கட்சிக்காரர் களை இவர் வேண்டிக்கொண்டார். முதன் மந்திரிகள் கட்சி உறுப்பினர்கள், மற்றும் தலைவர்களின் கருத்துக்களைப் பெற்றார் காமராஜ். நிரப்பந்தங்களும், எதிர் நிர்ப்பந்தங் களும் நிறைய இருந்தபடியால் இது சாமான்யமான காரிய மாக இல்லை. இச்சந்தர்ப்பத்தில் ஒருமனதான முறை விரும்பத் தக்கதென்பதைத் தம் சகாக்களிடம் கூறினார். கட்சித் தலைமைப் பதவித் தேர்தல் ஒருமனதாயிருக்க காங்கிரஸ் உறுப்பினர்களிடையே கருத்து ஒற்றுமை இருப் பது அவசியமென்பதைக் காமராஜ் விரும்பினார். ''ஒரு மனதான நடவடிக்கை''யைக் கொண்டு செலுத்த, அக்ராசனர் காமராஜருக்குக் காரிய கமிட்டி அதிகாரமளித்தது. அமைதி யான அறிவாற்றல் கொண்டு நடவடிக்கையை முழுத் திறமையுடன் கையாண்டு, பெரும்பாலோரின் கருத்து ஒருமித்த நிலையை எய்தச் செய்தார். இது காமராஜூக்குக் கிடைத்ததொரு வெற்றியே. காந்திய லட்சியங்களைக்

கொண்ட மூத்த தலைவரான மொரார்ஜி தேசாயும் இப் பதவியைப் பெற ஆவல் கொண்டவரே. லால்பகதூர் சாஸ்திரியையே காமராஜும், அதுல்ய கோஷ், சஞ்சீவ ரெட்டி, நிஜலிங்கப்பா, எஸ்.கே. பாட்டில் அடங்கிய சிண்டிகேட்டும் விரும்பினர். ஜெகஜீவன் ராம், ஸ்ரீமதி இந்திரா காந்தி, குல்ஜாரிலால் நந்தா ஆகியோரின் பெயர் களும் முன் வந்தன. எனினும், லால்பகதூர் சாஸ்திரிக்குப் பெருவாரியான ஆதரவு கிட்டியது, முக்கியமாக காமராஜ் அவர் பெயரைப் பிரரேபித்ததால்.

காமராஜ் மொரார்ஜி தேசாயைச் சந்தித்து, ஒருமித்த உடன்பாடு குறித்து விவரித்துரைத்தார். ஒருமனதான உடன் பாடு லால்பகதூர் சாஸ்திரிக்கே என்பதைக் கண்ட மொரார்ஜி தேசாய் பின்னுக்குச் சென்றார். உண்மை காந்தியவாதியாக வும், நல்லொழுக்கவாதியாகவுமிருந்த தேசாய் இயல்பாகவே ஏமாற்றமடைந்து, பெருந்தன்மையுடன் நிலைமையை ஒப்புக் கொண்டார். கட்சிக் கூட்டத்தில் லால்பகதூர் சாஸ்திரி தேர்தல் பிரேரணையை முன்மொழிந்தவர் இவரே. இது காமராஜரின் மாபெரும் வெற்றிகளில் ஒன்று. காங்கிரஸ் சட்டசபைக் கட்சி ஜூன் 2-ந்தேதி கூடிய சமயம் காமராஜ் அங்குப் பிரவேசித்ததும் உறுப்பினர்கள், முதன் மந்திரிகள், காங்கிரஸ் சட்டசபைக் கட்சியின் மற்றும் தலைவர்கள், தணிக்கையாளர்களாக வந்திருந்த அந்நிய நாட்டு உத்தியோ கஸ்தர்கள், ராஜ்யத் தலைவர்கள் இயற்கையாக எழுந்து நின்றனர்.

கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய காமராஜ் ஒருமித்த உடன்பாடு கிடைத்த முறையை எடுத்துரைத்து, தலைவரை ஒருமனதாகத் தேர்ந்தெடுப்பதை சாத்தியமாக்கியதற்காக பார்லிமெண்ட் உறுப்பினர், ராஜ்ய காங்கிரஸ் தலைவர் கள், காரியக் கமிட்டி உறுப்பினர் ஆகியோருக்கு நன்றி தெரிவித்து, கூட்டு அணுகுமுறைக்கான அவசியத்தை வலி யுறுத்திக் கூறினார். கூட்டுத் தலைமை, கூட்டு அணுகுமுறை இவைகளினால்தான், இனி ஆகவேண்டிய பணியை வெற்றி கரமாக நிறைவேற்ற முடியும் என்றார்.

இதுகாறும், பண்டித நேருவின் தலைமையாற்றல் என்ற பாதுகாப்புக் குடையின் கீழ்க் கவலையில்லாமல் பணியாற்றி வந்ததாகவும் இனி அது கிடைக்காதென்றும் காமராஜ் கூறினார். மிக்க எச்சரிக்கையுடனும், கவனத்துடனும்,

பொறுப்புடனும் நடந்து, அன்புமிக்க தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு விட்டுச் சென்ற ஒற்றுமையையும், உயர் மரபையும் பேணிக் காப்பது கடமை என்றார்.

மொரார்ஜி தேசாய் மாசற்ற நடத்தை, அப்பழுக்கற்ற தூய்மை, காந்தீய மனோபாவம் கொண்டவராயிருந்த போதிலும் லால்பகதூர் சாஸ்திரியைத் தேர்ந்தெடுக்கப் பல அம்சங்கள் காரணமாயிருந்தன. இந்த அம்சங்களே ஒரு வகையில் மொரார்ஜி எதிராகச் செயலாற்றின. லால்பகதூர் சாஸ்திரியிடமும் இந்த உயர் குணங்கள் குடிகொண்டிருந்தன; அத்துடன் தலைமை வகிப்பாற்றலுக்குத் தேவையான சாந்த குணம், இணக்கத்தன்மை ஆகியவையும் இருந்தன.

பாரதப் பிரதமர் பதவி, கூவி விற்கப்படும் பதவியோ அல்லது தேடிச் செல்லப்படும் பதவியோ அல்ல என்ற பலமான கருத்துக் கொண்டிருந்தார் காமராஜ். நாடிவராதவருக்கே இது கொடுக்கப்படவேண்டும். இம்முக்கிய நிகழ்ச்சியில் தமக்கு ஒரு நற்பெயரைக் காமராஜ் தேடிக்கொண்டதோ டல்லாமல் ஜனநாயகத்தைப் பேணி வளர்ப்பதற்கான பாரத கௌரவமும் அவரால் மேலோங்கியது; கட்சியின் ஒற்றுமையும், நாட்டின் ஒற்றுமையும் காக்கப்பட்டன.

13

காமராஜும் உணவுப் பிரச்சனையும்

1965-ம் ஆண்டு நாட்டில் தீவிர நிலைமை ஒன்று எழுந்தது. வறட்சிநிலை, பருவகால மழையின்மை போன்ற இயற்கைக் கலவரங்கள் காரணமாக, உணவுநிலையில் தீவிர நெருக்கடி ஏற்பட்டது. பதுக்கலைத் தடுக்க அரிசிப் போக்கு வரத்து மீது கட்டுப்பாடு கொணர்ந்து, ஜில்லாக்களில் உபரியாகவுள்ள அரிசியைக் கொள்முதல் செய்யும் பணியை அரசே மேற்கொண்டது. சென்னை நகரம் மிக்க அவதி யுற்றது. நியாயவிலைக் கடைகளில் சிறிதளவு அரிசி பெற மணிக்கணக்காக மக்கள் நீண்ட வரிசையில் நின்றனர். இவ்வமயம் சென்னையிலிருந்த காமராஜ், மக்களின் நிலை யைப் பார்த்தார். மக்கள் கருத்தையறிந்து தீவிர நெருக்கடி வராமலிருக்க உடனடியான, பயனளிக்கத்தக்க நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டுமென்பதை உணர்ந்தார். இவ் வமயம் சென்னையில் இருந்த, மத்திய நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியாருடன் பேசி, சென்னைக்கு மேலும் விரைவாக உணவுத் தானியங்களை வழங்க ஏற் பாடு செய்தார். அதிகாரபூர்வமற்ற பங்கீட்டு முறையைக் கொண்டு வரலாமாவென இவர்கள் ஆலோசித்தனர். மாவட்டங்களில் உணவுதானியப் போக்குவரத்து எளிதாக்கப் பட்டது. தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு அரிசியை விரை வாக அனுப்பி வைக்க ரயில்வே வாகனங்கள் கட்டாயச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. குடும்பப் பங்கீட்டுப் பொருள்/அட்டைகள் வினியோகிக்கப்பட்டன; நகரில் கையிருப்பு கணிசமான அளவுக்கு பெருக்கப்பட்டது. இந் நடவடிக்கைகள் நிலைமையைச் சீர்செய்ய, நெருக்கடி தவிர்க்கப்பட்டது. மிக்க மோசமான நிலைமையை துரித மாகவும் திறமையாகவும் கையாண்டு மிக்க தீவிர நெருக் கடியைத் தவிர்த்த பெருமை காமராஜரையே சாரும். காமராஜின் அறிவுமுதிர்ச்சி, துரித முடிவு, உறுதி

நடவடிக்கை இவற்றுக்கான மேலுமொரு உதாரணமாகும் இது. இது மேலுமொரு வெற்றி.

அடிக்கடி பயமுறுத்திக் கொண்டிருந்த தேசிய மொழிப் பிரச்சனை, இச்சமயம் சற்று தீவிரமடைந்தது. இந்தி பேசாத பகுதிகளில், முக்கியமாக, தமிழ்நாட்டில், இது தீவிர சர்ச்சையாயிற்று.

1957-ம் ஆண்டிலேயே, பாரதத்தின் மொழிக் கொள்கை தீவிர சர்ச்சையாயிற்று. பின்னர் காங்கிரஸ் கட்சியில் இப்பிரச்சனையை விவாதித்து இரு தீர்வுகள் கொணர்ந்தனர். மும்மொழித் திட்டம் என்பது ஒன்று; இதன்படி ஒவ்வொரு குழந்தையும் மாநில மொழியையோ அல்லது தாய் மொழியையோ கற்க வேண்டும்; ஆங்கிலமும் மேலுமொரு நவீன இந்திய மொழியும் கற்க வேண்டும். இந்தி பேசாத பகுதியினர் விஷயத்தில் இந்தி தவிர மற்றொரு வழி. ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக கொண்டு, அதிகாரபூர்வமான பணிகளுக்கு இந்தியைக் கொள்வது என்பது இரண்டாவது தீர்வு. ஆங்கிலம் எவ்வளவு காலத்துக்கு நீடிக்குமென்பது குறித்து, எவ்வளவு நாட்களுக்கு ஆங்கிலத்தைக் கையாள்வது என்பதை இந்தி பேசாத மக்கள் முடிவு செய்வர் என்று பார்லிமெண்டில் பண்டித நேரு பிரகடனம் செய்தார்.

தமிழ்நாட்டில் ஏற்கனவே கொதித்துக் கொண்டிருந்த உணர்ச்சிகள் வெளிக்கிளம்பவே, இதைத் தொடர்ந்து நடந்த கொந்தளிப்பில் மாணவர்கள் தீவிரப்பங்கு கொண்டனர். இந்தி எதிர்ப்புக் கலவரங்களின்போது காமராஜ் சென்னையில் இருக்கவில்லை. வன்முறையை அடக்கி, அரசு சொத்தை நாசம் செய்வதைத் தடுக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளைப் பொதுவாக இவர் அங்கீகரித்தார். ராஜாஜி, சி. என். அண்ணாதுரை (திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்) மற்றும் பிரபல பிரமுகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பிப்ரவரி 2-ந்தேதி இந்தி எதிர்ப்புக் கொந்தளிப்பு நிறுத்தப்பட்டது.

ஆங்கில விளம்பரப் பலகைகள் கூடாதென்ற கொந்தளிப்பை டில்லியில் ஜனசங்கம் துவக்கியது; கார்களின் நம்பர் தட்டுகளில் கூட ஆங்கில எண்களை எதிர்த்தனர்.

டில்லியில் ஜனவரி 22-ந் தேதி கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி கொடுமையான கொந்தளிப்பு முறைகளைக்

கண்டனம் செய்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. எந்த உருவிலும் பலாத்காரத்தை அனுமதிக்காதிருக்குமாறு எல்லா அரசியல் கட்சிகள், மற்றும் குழுக்களைச் சேர்ந்த மக்களைக் கேட்டுக் கொண்டதோடு, நாட்டின் அபிவிருத்திக்குக் குந்தகம் ஏற்படாமலிருக்க உறுதியான முயற்சி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டிக் கொண்டது. மேலும் எந்தவகையான வன்முறையையும் உறுதியாக அடக்குமாறு அரசினரைக் கேட்டுக் கொண்டது காரியக் கமிட்டி.

மொழிப் பிரச்சனை குறித்து ஒருமனதாக விரிவான தொரு தீர்மானத்தையும் இக்கமிட்டி நிறைவேற்றியது. மொழிக் கொள்கை குறித்து ஒருமனதான கருத்தைத் தீட்டிய விதத்தை விரிவாகக் கூறி, காமராஜ் இத்தீர்மானம் குறித்து மகிழ்ச்சியடைந்தார்.

14

இறுதிப் பத்தாண்டு

சட்ட சபைக்கு 1967-ல் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. போட்டியிட்ட காமராஜ் தோல்வியுற்றார். இவ்வாண்டு காங்கிரசுக்கு மோசமான ஆண்டாயிருந்தது. பல்வேறு தொகுதிகளில் காங்கிரஸ் தோல்வியை எதிர் நோக்க வேண்டியிருந்தது. 1967-ம் ஆண்டு இறுதிவரை காமராஜ் தொடர்ந்து காங்கிரஸ் அக்ராசனராக இருந்து வந்தார். காலவரையின்றித் தொடர்ந்து இருக்க விரும்பவில்லை அவர். ஆகையால் நிஜலிங்கப்பா, காங்கிரஸ் அக்ராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கன்னியாகுமரி தொகுதியிலிருந்து பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்த நேசமணி, திடீரென மறையவே இடைத் தேர்தலில் போட்டியிட காமராஜைச் சம்மதிக்கச் செய்து, 1969-ம் ஆண்டு லோக் சபைக்கு அவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1971-ல் பொதுத் தேர்தல்கள் நடைபெற்ற போது, இவர் மறுபடியும் இதே தொகுதியில் போட்டியிட்டார். தமிழ் நாட்டில் பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரே ''காங்கிரஸ்-ஓ'' நபர் இவர் தான்.

காமராஜ், லோக் சபைக் கூட்டங்களுக்குத் தவறாமல் சென்றார். ஆனால் விவாதங்களில் இவர் அபூர்வமாகத் தான் கலந்து கொண்டார். ஆனால் இவர் அகில இந்திய அரசியலில் முக்கிய நபரானார். இவர் கருத்தும், ஆலோசனையும் கௌரவிக்கப்பட்டன. கட்சி நபர்கள், கட்சியைச் சேராதவர்கள், இதர எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள், இவரைச் சந்தித்து முக்கிய விஷயங்களை இவருடன் விவாதிப்பது வழக்கம்.

காமராஜ், விவாதித்து, கலந்தாலோசிக்கத்தக்க தேசியத் தலைவராகி விட்டிருந்தார். தமக்கே உரித்த அடக்கமான முறையில் தம் கட்சி நபர்களுக்கும், தமது ஆலோசனையை நாடிய மற்றுமிதரார்களுக்கும் வழிகாட்டினார். 1975-ம் ஆண்டு ஜூன் மாதம், சர்க்கார் அவசர நிலைப் பிரகடனம்

செய்து, அதிகாரிகளுக்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க முழு அதிகாரம் வழங்கும் அவசரச் சட்டத்தைக் கொணர்ந்தது.

தமிழ்நாட்டில் விரிவாகச் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்த காமராஜ் சுற்றுப் பயணத்தின் முதற்கட்ட முடிவில் சென்னை திரும்பினார். தமிழ்நாட்டில் பழைய காங்கிரசை (காங்கிரஸ்-''ஓ'') புனரமைத்து, பலப்படுத்த விரும்பினார். இவர் முக்கியமாக கிராமப்புறப் பகுதிகளிலேயே கவனம் செலுத்தி, மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதையே விரும்பினார். சென்றவிடமெல்லாம், பெருங்கூட்டங்கள்; அடிக்கடி நள்ளிரவு வரை கூட்டம் மணிக்கணக்காக நடைபெறும். எல்லா இடங்களிலும் இவர் வரவேண்டுமென விரும்பினர். சந்தர்ப்ப வசத்தால் உடல் அசதி காரணமாகப் போக முடியாது. சில இடங்கள் விட்டுப் போனால், இவர் செல்லும் நெடுஞ்சாலைகளில் மக்கள் திரளாகக் கூடி நின்று தங்கள் இடங்களுக்கு வந்து சொற்பொழிவாற்றினாலொழிய மேலே செல்ல அனுமதிக்க மாட்டார்கள். மிக்க விறுவிறுப்பான சுற்றுப் பயணத்துக்குப் பின்னர் மற்ற மாவட்டங்களில் சுற்றுப் பயணத்தைத் தொடங்குமுன் ஓய்வெடுக்கச் சென்னை திரும்பினார். இவர் பிரயாசை அதிகமாகவே உடல் நலம் பாதிக்கப் பட்டது. இவரது மருத்துவர் சிறிது காலத்துக்கு முற்றிலும் ஓய்வெடுக்குமாறு இவருக்கு ஆலோசனை கூறினார். காமராஜ் தம் உடல் உபாதையை தீவிரமாக எதிர்த்துப் போராடினார்: ஆனால் விதியும், துரதிர்ஷ்டமும் சதி செய்தன. சீக்கிரமே இவர் உயிரைக் குடிக்க இறுதிக் காலம் உடனடியாகவே வந்துவிட்டது. சிறிதுகாலம் இவர் நோய் வாய்ப்பட்டிருந்த போதிலும் திடீர் இறப்பை எவரும், இவரது டாக்டரும் கூட எதிர்பார்க்கவில்லை. 1975-ம் ஆண்டு அக்டோபர் 2-ந் தேதியன்று, நகரம் காந்திஜியின் பிறந்த தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்தது. காமராஜ் வழக்கப்படி தமது எளிய பகலுணவை அருந்தி முடித்தார்; அப்போதெல்லாம் அவர் சாப்பிடும் உணவின் அளவு குறைந்துவிட்டிருந்தது.

தம் உடல் உபாதையை எதிர்த்து, உளஉறுதியுடன் போராடிக் கொண்டிருந்த போதிலும், ஒரு கட்டத்தில் சற்று மனச்சோர்வு அடைந்தார். இறுதி நாட்களில் தம் அமைதியின்மையை வெளிப்படுத்தினார்.

அக்டோபர் 2-ந் தேதி பிற்பகல் சுமார் 3.00 மணிக்கு மார்பில் வலி வருவதாகச் சொன்னார். வியர்த்து விட்ட தோடு, மூச்சுவிட முடியவில்லை. விசுவாசமிக்க தம் வேலைக்காரர் வைரவனைக் கூப்பிட்டு, டாக்டருக்கு டெலி போன் செய்யச் சொன்னார், டாக்டர் வந்தார். ஆனால் டாக்டர் வருமுன்னரே, மூச்சு நின்று விட்டிருந்தது.

செய்தி காட்டுத்தீப் போல் பரவவே, திரளான மக்கள், திருமலைப் பிள்ளை ரோடிலுள்ள அவர் இல்லம் நோக்கி விரைந்தனர். கூட்டம் தாங்காது என்ற அச்சம் ஏற்பட்டு மவுண்ட் ரோடிலுள்ள ராஜாஜி மண்டபத்துக்கு உடல் எடுத்துச் செல்லப்பட்டு, மறுநாள் பிற்பகல் வரை மக்கள் பார்த்து மரியாதை செலுத்த வைக்கப்பட்டிருந்தது. தங்கள் அபிமானத் தலைவரை கடைசியாகக் காண நாற்றிசை களிலிருந்தும் மக்கள் விரைந்தோடி வந்தனர். இரவு முழு வதும் மறுநாளும் மக்கள் திரள் திரளாக வந்தவாறிருந்தனர்; சர்க்கார் எஸ்டேட் காம்பவுண்ட் ஜனசமுத்திரமாகக் காட்சி யளித்தது. இளையோரும், முதியோரும் பித்துப் பிடித்தாற் போல் ஓடோடி வந்தனர். அநேகர் கண்ணீர் விட்டனர். பிரபல திரையுலக நட்சத்திரம் ஒருவர், அநாதைக் குழந்தை யைப் போல அழுதார். ''ஓ என் ராஜாவே'' என்று கூறித் தம் சொந்தப் பிள்ளையையே இழந்தது போல விம்மி யழுதார் வயதான மாது ஒருத்தி; இவரைச் சமாதானப் படுத்துவது போதும் போதுமென்றாகி விட்டது.

பிரம்மாண்டமான இறுதி ஊர்வலம், அக்டோபர் 3-ந்தேதி பிற்பகல் 4.00 மணியளவில் ராஜாஜி மண்டபத்தி லிருந்து கிளம்பி, முக்கிய பாதைகளின் வழியே செல்ல, போகப் போகக் கூட்டம் பெருகியது. ராஜாஜி ஹாலி லிருந்து கிண்டியிலுள்ள ராஜாஜி மண்டபம் வரையான ஐந்து மைல் தொலைவைக் கடக்க சுமார் 3 மணி நேரம் பிடித்தது. அந்த இடத்தில் இந்தியத் தலைவர்களும் அதிகாரி களும், அந்நிய நாட்டவர்களும் மக்கள் பெருங்கடலைப் போன்று கூடியிருந்தனர். இறுதி மரியாதை செலுத்த டில்லியிலிருந்து திருமதி இந்திராகாந்தி விமானத்தில் உரிய தருணத்தில் வந்தார். மரியாதைச் செலுத்திய அவரால் கண்ணீரை அடக்க முடியவில்லை. சிதை எரியூட்டப்பட்டு, தீச்சுடர் வானை எட்டியது. மக்கள் விசும்பியவாறும், புலம்பியவாறுமிருக்க, கடவுளே கண்ணீர் விடுவதுபோல் தூறல் தூறியது. இப்படியாக அமரரானார், அபார ஆற்றல் வாய்ந்த அந்த அரிய மனிதர்.

மாமேதைகளின் மகத்தான வரிசையில் அவர் சேர்ந்து விட்டார்.

காமராஜ், நேசிக்கத்தக்கதொரு மனிதர். எவரையும் ஒருபோதும் புண்படுத்தியதில்லை. தம் அன்பினாலும், நற்குணத்தினாலும் எல்லோரையும் எதிரிகளைக் கூட, தம்வயப்படுத்தினார். வெகு அபூர்வமாகத்தான் கோபம் வரும்; அப்படியாகக் கோபப்பட்டாலும், பார்க்கச் சகிக் காது நடந்து கொண்டதற்காகவோ அல்லது நேர்மையின் மைக்காகவோ தான் கோபப்பட்டார். எவரிடமும் இவருக்கு விரோதமில்லை; நாட்டின் அக்கறைக்கும், மக்கள் அக்கறைக் கும் விரோதமாகச் செயல்படுபவரைச் சகித்துக் கொள்ள மாட்டார். சிறந்த தோழராக விளங்கினார். உதவி தேவைப் படுவோருக்கு எப்போதும் உதவிக்கரம் கொடுக்கத் தவறிய தில்லை. இவருடைய நெருங்கிய நண்பரும் நம்பகமான ஆலோசகருமான ஜி. ராஜகோபால் (ராஜு) அகால மரண மடைந்தபோது இவருக்கேற்பட்டது சொந்த இழப்பாயிருந் தது; அவர் எப்போதும் இவருடனிருந்தவர். இவ்வமயம் காமராஜ் கண்ணீர் வடித்தார். பழைய காங்கிரஸ் ஊழிய ரான ஆர். பாலன் காமராஜின் மிக்க ஈடுபாடுள்ள நண்பர். இவரும் அகால மரணமடைந்தார். இவரும் காமராஜைப் போல ஒரு பிரம்மச்சாரி; காமராஜை மிகவும் அவர் நேசித் தார். இவ்வமயமும் அவர் கண்ணீர் சிந்திய மற்றொரு சமயம் ஆகும்.

பண்டித ஜவஹர்லால் நேருவிடம் காமராஜ் அளவுக்கு மீறிய நேசங் கொண்டிருந்தார். காமராஜ் அடிக்கடி பெரும் மதிப்புக் கொண்டிருந்தார். ஒரு சமயம் காமராஜ் முதன் மந்திரியாயிருந்தபோது, பம்பாயில் தமிழ் மக்கள் அடங்கிய தொரு கூட்டத்தில் ராஜாஜி பேசுகையில், தமிழ்நாட்டி லுள்ள அரசு சிறந்ததல்ல எனப் பொருள்படும்படி பம்பாயி லுள்ள தமிழர்கள் (பம்பாயில்) சிறந்த அரசாட்சியைக் கொண்டிருப்பது பற்றி மகிழ்ச்சியடைய வேண்டுமெனக் கூறினார். யாரோ ஒருவர் இச்செய்தியைத் தலையங்கம் செய்திருந்த காலைப் பத்திரிகையை. எடுத்துக்கொண்டு போய் காமராஜிடம் காண்பித்தார். காமராஜ், புன்சிரிப்புச் சிரித்துவிட்டுக் கூறினார்; ‘‘அவரைப் பற்றி (ராஜாஜி) அவர்கள் (பம்பாயில்) என்ன நினைப்பார்கள்’’. காமராஜ ருக்கே உரித்தானதொரு பதில் இது.

மத்திய மந்திரிசபையில் முன்பு நிதி அமைச்சராயிருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி, காமராஜின் மற்றொரு நெருங்கிய நண்பர். காமராஜ், அவருடன் மணிக்கணக்காக இருப்பது வழக்கம்; அநேகத் தடவைகள் கிருஷ்ணமாச்சாரியின் ஆலோசனையை நாடுவார். டி. டி. கே. யின் நெருங்கிய நண்பர்களில் சிலர் வழக்கமாக டி. டி. கே. யின் இல்லத்தில் சந்தித்து, மனிதர்கள், விஷயங்கள் குறித்து விவாதிப்பதுண்டு; இவர்களில் ஒருவர் ஒரு சமயம் ராஜாஜியைப் பற்றி மரியாதையின்றிப் பேசினார். காமராஜுக்குக் கோபம் வரவே அவ்வாறு பேசாதிருக்குமாறு அவரைக் கேட்டுக் கொண்டார். கதர் உற்சாகிகள் அடங்கியதொரு சிறுகூட்டத்தில் காமராஜ் பேசிக் கொண்டிருக்கையில் பழைய கதர் அனுபவசாலியொருவர், ராஜாஜியைக் குறை கூறத் தக்கவாறு சொன்னார். இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய காமராஜ் அவரைக் கடிந்து கொண்டு அம்மாதிரி அவர் பேசக்கூடாது என்றார் அவரிடம். ஏதோ ஒரு முக்கிய விவகாரம் குறித்து விவாதிக்க ஒரு தடவை ராஜாஜி திடீரென காமராஜ் இல்லத்துக்குச் சென்றார். காமராஜ் மிக்க கலக்கமடைந்தார். நீங்கள் ஏன் வந்தீர்கள் என்னைக் கூப்பிட்டிருந்தால், நான் தங்கள் இல்லத்துக்கு வந்திருப்பேனே'' என்றார். மனப்பூர்வமாக அப்படித்தான் நினைத்திருந்தார்.

எளியதொரு தொண்டராக, ஊழியராக இருந்த காமராஜர் சந்தர்ப்ப வசத்தால் மட்டுமல்லாமல் நேர்மை, தியாகம் ஆகியவற்றினாலும் மிக்க உயர்ந்த பதவியை வகித்தார். காமராஜின் அடக்கம், நேர்மை, இணக்கம், நடத்தைச் சீர்மை, தன்னலமின்மை, நாட்டின்பால் ஈடுபாடு ஆகிய முக்கிய அம்சங்கள் அவரை உயர் மட்டத்துக்குக் கொணர்ந்து மக்களின் ஆதரவையும் நேசத்தையும் தேடித் தந்தன.

இவர், மக்களின் முடிசூடா மன்னனாக விளங்கியதில் வியப்பே கிடையாது.

இத்தகையதொரு புதல்வரை ஈந்த இந்நாடு நம் தவத் திருத் தாய்நாடே!

• • •

முடிவுரை

காமராஜ் விட்டுச்சென்ற பரம்பரை யாது? அவரது வாழ்க்கையிலிருந்து கற்றறிய வேண்டிய பாடம் என்ன?

அவரது வாழ்க்கை முழுவதுமே, நாட்டிற்கும் மக்களுக்கும், அர்ப்பணித்துக்கொண்ட சேவையின் சகாப்தம். அவர் பிரம்மச்சாரியாக இருந்ததற்குக் காரணம் குடும்ப பந்தங்களில் சிக்கிக் கொண்டு தவிக்காமலிருப்பதை விரும்பியதே. மக்கள், முக்கியமாக, பாமர மக்களே அவரது கடவுள்; அவர்களது பலிபீடத்தில் தம் வாழ்க்கை முழுவதையும் காணிக்கையாகத் தந்தார். மக்களின் மனிதராகத் திகழ்ந்தார்; மக்களே இவரது உற்றார் உறவினர்.

நாட்டில் தாண்டவமாடிய ஏழ்மையைக் கண்டு மன முருகினார். அதை அறவே ஒழிக்க வழிமுறைகளைப் பற்றி சதாசிந்தித்துக் கொண்டிருந்தார். ஆனால் அதேசமயம் அவர் பணக்காரர்களையோ, அல்லது முதலாளிகளையோ வெறுக்கவில்லை. ஏழ்மையையும், உத்யோகமின்மையையும், அகற்ற அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினார். முதலாளிகள், பணக்காரர்களில் பலர் இவரது நண்பர்களாயிருந்ததோடு இவருக்காக எதுவும் செய்யவும் அவர்கள் தயாராயிருந்தனர். பணக்காரர்களின் பணத்தைப் பிடுங்கி அவர்களை ஏழையாக்குவது இவரது இலட்சியமல்ல. நாட்டின் நலனுக்காக அவர்களின் செல்வத்தை உபயோகிப்பதன் வழி அவர்களை உபயோகமுள்ளவர்களாக்குவதே லட்சியம். இது சம்பந்தமாக இவர் காந்திஜியைப் பின் பற்றினார். சமத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்; பணக்காரர்களைக் கீழிறக்காமல் ஏழைகளின் நிலையை மேலே உயர்த்தி இதைச் சாதிப்பதே அவர் விருப்பம். எந்த விதமான சாதிப் பாகுபாட்டிலும் அவருக்கு நம்பிக்கை கிடையாது. வகுப்புணர்வு இல்லாதவர்; வகுப்புத் துவேஷத்தை வெறுத்தார் இவருக்கு மிக்க நம்பகமான ஆழ்ந்த நண்பர்களாயிருந்தவர்களில் பிராமணர்களும் பலர் உண்டு. தீண்டாமையை ஒழிப்பதைத் தீவிரமாக ஆதரித்தார். காமராஜூக்கு எல்லோரும் சமம். தாழ்த்தப்பட்டோர் முன்னேற வேண்டுமென்பதை விரும்பினார். எல்லாக்

குழந்தைகளும் பள்ளி செல்ல வேண்டுமென்றார். இக் காரணம் பற்றியே இலவசத் துவக்கக் கல்வியை அமுலுக்குக் கொண்டு வந்தார். தமக்கே உரித்த முறையில், தேசீயச் சிந்தனை ஒன்றிணைத்து, வலுவடையச் செய்தார்; பிளவுச் சக்திகளை எதிர்த்து நின்றார். இவர் உண்மையான நவ பாரதச் சிற்பிகளில் தலைசிறந்த ஒருவராக விளங்கினார். இத்துறையில் இவரது பணி தனிச் சிறப்புமிக்கது.

நவ
பாரதச்
சிற்பிகள்

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்
செய்தி ஒலிபரப்பு அமைச்சகம்
இந்திய அரசு